
# தாய்வீடு

இதயத்துடிப்பில் மாற்றங்கள்



THAIVEEDU AUGUST 2019 ஒகஸ்ட் HOME & LIVING One Dollar www.thaiveedu.com info@thaiveedu.com




ISSN 2369-3657

**தாய்வீடு**

## சிவப்பு யாழ்ப்பாணியம்

'தாடி மீசையை விட்டால் யாழ்ப்பாணத்தில் வேறு எதுவும் முளைக்காது' என்று அங்கதச்சுவையோடு ஒருமுறை குறிப்பிட்டார் காலஞ்சென்ற இடதுசாரிப் போராளியும் இங்கிலாந்தின் நிறவெறி எதிர்ப்புப் போராளியும் புகழ் பெற்ற ஆங்கில எழுத்தாளருமான அ. சிவானந்தன்.

எனினும், கல்வி வளர்ச்சியும் கருத்தியல் வளர்ச்சியும் யாழ்ப்பாணத்தில் மேலோங்கியமையைப் பலரும் அறிவர். இதற்குப் பல வரலாற்றுக் காரணங்கள் உள்ளன. அவற்றுள் தமிழ்ப் புலமை மரபு, காலனித்துவ எதிர்ப்பு மரபு, இடதுசாரி மரபு என்பன அடங்கும்.

யாழ்ப்பாண வாழ்வியலைக் குறிப்பிட்டு, 'யாழ். மையவாதம்', 'யாழ்ப்பாணியம்', 'யாழ். மேட்டுக்குடி ஆட்சி' என்பன போன்ற விமர்சனங்கள் எழுந்தன. இவற்றில் உண்மை இருந்தாலும் இவற்றுக்கு மாற்றாக ஒரு சிறப்பான முற்போக்கு மரபும் யாழ்ப்பாணத்தில் தோன்றியது என்பதை மறுக்க முடியாது.

ஆறுமுக நாவலரை அடியொற்றிய பொன்னம்பலம் இராமநாதனும் அவர் மரபில் வந்த பல ஆளுமைகளும் அரசியலாரும் யாழ். மேட்டுக்குடி மரபின் அடையாளமும் ஆளுமைத் தொடர்ச்சியுமாகவே தென்பட்டனர். இதற்கு எதிரான புதுமை மரபை உருவாக்கி வளர்த்ததில் பெரும்பங்கு ஹன்டி பேரின்பநாயகம், கார்த்திகேசன் போன்றவர்களையும் யாழ்ப்பாணம் வாலிபர் காங்கிரசையும் சாரும். இவர்கள் சாதி ஒழிப்பு, முற்றான சுதந்திரம், சமூக நீதி என்பனவற்றை முன்வைத்துப் போராடினார்கள்.

அக்காலகட்டத்துக்குரிய கருத்தியலையும் சமூக மனோபாவங்களையும் கருத்திலெடுத்தாலும் இராமநாதன் மரபினருக்குத் தீர்க்கதரிசனமும் சமூக சமத்துவ உணர்வும் நீதியும் இருக்கவில்லை.

வாலிபர் காங்கிரஸ் மரபில் வந்த பலர் காலவோட்டத்தில் இடதுசாரிகளாக மாறிவிட்டனர். இந்த மரபின் தொடர்ச்சியை ஈழ விடுதலைப் போராட்டத்தின் பல விடயங்களிலும் நாம் காண முடியும்.

யாழ்ப்பாணத்தில் இடதுசாரிகளும் கொம்யூனிசமும் வேர் விட முடியாது என்பதே பலருடைய கருத்தாக இருந்தது.

கருத்தியலில் உறுதியோடு, சமூகப் போராட்டங்களில் நிறைவான பங்களிப்புச் செய்து சமூக நீதிக்கும் சமத்துவத்துக்குமான ஒளிவிளக்கைத் தொடர்ந்தும் பேணியவர்கள் யாழ்ப்பாண இடதுசாரிப் போராளிகளும் அறிஞர்களும் கலைஞர்களுமே என்பதை மறுத்துவிட முடியாது.

போராட்டம் என்பதும் அரசியல் என்பதும் தேர்தலும் பிரசாரமும்தான் என்ற கருத்துநிலையை அவர்கள் உடைத்தார்கள். சாதி ஒழிப்புப் போராட்டம், கல்வியூட்டலில் பெருங்கவனம் செலுத்தியமை, ஊடகத்துறை, தமிழ்ப் புலமைத்துறை எனப் பல்வேறு தளங்களில் அவர்கள் செயற்பாடுகள் இருந்தன.

'தீவிரவாதிகளாக இருப்பதென்பது பிரச்சினைகளின் வேர்கள் எங்கே இருக்கின்றன என்று ஆழமாகப் புரிந்து கொள்வதுதான்' என்று கார்ல் மார்க்ஸ் கூறியதை நினைவுகூர்வது பொருத்தமானது.

இத்தகைய முற்போக்கு அரசியலின் ஒரு கொடுமுடியாகத்தான் மு. கார்த்திகேசன் விளங்கினார். ஜனவசியமும் ஆளுமையும் மிக்கவர். இவர் அங்கதச்சுவை ததும்பப் பேசுவதில் வல்லவர். சான்றோர்களுக்கும் சான்றோராகத் திகழ்ந்தார்.

அவருடைய நினைவையும் வாழ்வையும் அவர் முன்னெடுத்த சமூக நீதியின் மேன்மையையும் இந்த இதழின் கட்டுரைகள் பல தெளிவாக விளக்குகின்றன.

முகப்பு ஓவியம்: டிராட்ஸ்கி மருது

**Publisher & Editor : PJ. Dilipkumar**
பதிப்பாளர், ஆசிரியர் : பி.ஜெ. டிலிப்குமார்

நிறுவன வரைகலைஞர் : கருணா

ஆலோசகர் குழு : அருண்மொழிவர்மன், சேரன், துஷி ஞானப்பிரகாசம், ஞானம் லெம்பட், கந்தசாமி கங்காதரன், பொன்னையா விவேகானந்தன், ரவிச்சந்திரிகா.

ஓவியங்கள் : ஆசை இராசையா (இலங்கை), டிராட்ஸ்கி மருது (இந்தியா), ஜீவா (இந்தியா), K. கிருஷ்ணராஜா (இங்கிலாந்து), ரமணி (இலங்கை), சௌந்தர் (இங்கிலாந்து), ரஷ்மி (இங்கிலாந்து).

புகைப்படங்கள் : K. கிருஷ்ணராஜா (இங்கிலாந்து), சர்வேசன், துசியந்தன் துரைரத்தினம்.

தட்டச்சு : ஜீவா, சாம் டானியல்.

ஒப்புநோக்கல் : கௌரி, கந்தசாமி கங்காதரன்.

பொது உறவுத் தொடர்பு : குமணன் தம்பிஐயா

ரொறன்ரோ விநியோகம் : இராமநாதன் ரூபன், சசி, மெய்யழகன்.

மொன்றியால் தொடர்பு : சுகுமாரன் சின்னையா.

ஒட்டாவா தொடர்பு : அலெக்ஸ் சிவசம்பு: 1-613 -276-7253

அஞ்சல் முகவரி : Editor
P.O.Box #63581
Woodside Square
1571 Sandhurst Cir.
Toronto, ON. M1V 1V0

Tel : 416-646-3422, 416-857-6406
Fax : 416-849-0594
Web : www.thaiveedu.com
E-mail : info@thaiveedu.com


Printed on recycled paper

# தோழர் கார்த்திகேசன்




இலங்கைக் கம்யூனிஸ்ட் இயக்கத்தின் முன்னோடிகளுள் ஒருவரும் சிறந்த கல்வியாளரும் சமூக சேவையாளரும் தலைசிறந்த பேச்சாளருமான தோழர் மு. கார்த்திகேசன் அவர்களின் நூற்றாண்டு நிகழ்வுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கும் இவ்வேளை அரசியலிலும் கல்விப் பரப்பிலும் பொதுவாழ்விலும் அவர் ஆற்றிய காத்திரமான பங்களிப்புக் குறித்து நினைவு கூறுவது சாலவும் பொருத்தமானதாகும்.

இது தோழர் மு. கார்த்திகேசன் அவர்களின் நினைவுப் பகிர்வு.




### இதயத்துடிப்பில் மாற்றங்கள்
- ரவிச்சந்திரிகா

ஒருவருக்கு இயல்பாக உள்ள இதயத் துடிப்பு, இன்னொருவருக்கு நோயாகக் கருதப்படலாம்.




### ஆசனப் பயிற்சி
- பாதுசா ஆனந்தநடராசா

இவ்வாசனங்கள், எல்லோராலும் ஒவ்வொரு நாளும் பயிற்சி செய்யக்கூடிய எளிமையான அடிப்படை ஆசனங்களாகும்.




### பத்தாவது உலகத் தமிழாராய்ச்சி மாநாடு
- பொன்னையா விவேகானந்தன்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் பத்தாவது மாநாடு ஜுலையில் சிக்காக்கோ நகரில் பெருவிழாவாக நிகழ்ந்தது.




### நினைவில் நிறைந்திருக்கும் எழுத்தாளர் ராஜசேகர் ஆத்தியப்பன்

தாய்வீடு எழுத்தாளருள் ஒருவரான திரு. ஆத்தியப்பன் ராஜசேகர் அவர்கள், கடந்த ஜுலை 13ம் நாள் தமிழ்நாட்டில் காலமானார்

**தேர்தலை எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் சிறுபான்மை மக்களும் அரசியல் தலைவர்களும்** 4
அ. கணபதிப்பிள்ளை

**தவமணி ரீச்சர்** 47
கதிர் துரைசிங்கம்

**குளத்தைக் கலக்கிப் பருந்துக்கு இரை கொடுத்தது போல...** 49
எஸ்.கே. விக்னேஸ்வரன்

**நாயகன்!** 51
க. ரவீந்திரநாதன்

**சிதைக்கப்பட்ட சமூகத்தில் அழிக்கப்படும் மனிதர்கள்** 55
ரதன்

**வேர்களால் தேடுதல்: ஆற்றூர் ரவிவர்மா 1930 - 2019** 60
பா. அகிலன்

**இலக்கிய இயக்கங்கள்** 65
உமை

**அரசியல் காட்டூன்களும் காட்டூனிஸ்டுகளும்** 113
எஸ். தர்மதாஸ்

**மண் கடன்!** 115
செல்வம் அருளானந்தம்

**யாருக்கும் இல்லை அந்தரங்க வாழ்க்கை** 119
இமையம்

Funded by the Government of Canada | Canada

*மேலும் ஆக்க விபரங்கள் 5ம் பக்கம்*

பெயர் தோற்றாத கட்டுரைகளுக்கு ஆசிரியரே பொறுப்பு.
ஆக்கங்கள் அனைத்துக்கும் ஆக்கியோரே பொறுப்பு.



தோழர் கார்த்திகேசன் 100

# மக்களுக்கான சித்தாந்தத்தைச் சிதறவிடாமல் வாழ்ந்துகாட்டிய தோழர் கார்த்திகேசன்

- கே. சுப்பையா

இலங்கைக் கம்யூனிஸ்ட் இயக்கத்தின் முன்னோடிகளில் ஒருவரும், சிறந்த கல்வியாளனும், சமூக சேவையாளரும், தலைசிறந்த பேச்சாளருமான தோழர் மு. கார்த்திகேசன் அவர்களின் நூற்றாண்டு தின நிகழ்வுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கும் இவ்வேளை அரசியலிலும், கல்விப் பரப்பிலும், பொதுவாழ்விலும் அவர் ஆற்றிய காத்திரமான பங்களிப்புக் குறித்து நினைவு கூறுவது சாலவும் பொருத்தமானதாகும்.

மலேசியாவிலிருந்து வந்து, கொழும்புப் பல்கலைக்கழகத்தில் பட்டப்படிப்பை முடித்துக் கொண்ட தோழர் கார்த்திகேசன், கம்யூனிஸ்ட் கட்சியின் முழுநேர ஊழியராகப் பணியாற்றினார். அத்தோடு கட்சியின் ஆங்கிலப் பத்திரிகையின் ஆசிரியர் குழுவிலும் இணைந்து செயலாற்றினார். அச்சமயம் வடபகுதியில் கம்யூனிஸ்ட் கட்சியின் நடவடிக்கைகளை விஸ்தரித்து, முன்னெடுத்துச் செல்லும் பொருட்டு, கட்சியின் மத்திய குழுவால் யாழ்ப்பாணத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டார்.

யாழ்ப்பாணத்தில் அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ், இலங்கை தமிழரசுக் கட்சி என்பன தமிழ் மக்கள் மத்தியில் ஆதிக்கம் செலுத்தி வந்தன. இக்கால கட்டத்தில் கம்யூனிஸ்ட் கட்சியையும், அதன் கொள்கைகளையும் பரப்பம் நடவடிக்கைகளில் இளைஞரான தோழர் கார்த்திகேசன் தீவிரமாக ஈடுபட்டதுடன், வடபகுதியிலுள்ள அடக்கி ஒடுக்கப்பட்ட மக்கள் மத்தியிலுள்ள இளைஞர்களை இணைத்து, தொடர்ச்சியான அரசியல் வகுப்புகளின் மூலம் அரசியல் அறிவை வளர்த்தெடுத்து அணிதிரட்டினார். யாழ். குடாநாட்டிலுள்ள தொழிலாளி, விவசாயிகள் மத்தியிலும், சாதியின் பெயரால் அடக்கி ஒடுக்கப்பட்ட மக்கள் மத்தியிலும் பொதுவுடமைக் கருத்துக்களைப் பரப்பினார். இதன் மூலம் அந்த மக்கள் மத்தியில் புதிய சிந்தனையையும், புதிய எழுச்சியையும் உருவாக்குவதில் பெரும் வெற்றியடைந்தார்.

தோழர் கார்த்திகேசனால், அரசியல் ரீதியாக வளர்த்தெடுக்கப்பட்ட பலர், அவர் வாழ்ந்த காலத்திலேயே தலைசிறந்த எழுத்தாளர்களாகவும், கவிஞர்களாகவும், பேச்சாளர்களாகவும் திகழ்ந்தார்கள். வடபகுதியில் பிற்போக்குக் கொள்கைகளும், மூடத்தனமான சிந்தனைகளும் புரையோடிப் போயிருந்த காலகட்டத்தில், அவரால் ஏற்படுத்தப்பட்ட புதிய சிந்தனை, புதிய கலாசாரம் என்பன வேகமாகப் பரவியதுடன், வர்க்க பேதமற்ற, ஏற்றத் தாழ்வில்லாத ஒரு சமுதாய அமைப்பைத் தோற்றுவிக்க வேண்டுமென்னும் கருத்து தீவிரமாகப் பரவியது.

இதேவேளை தோழர் கார்த்திகேசன் யாழ். இந்துக் கல்லூரியில் ஆசிரியராகவும் கடமையாற்றினார். அவர் ஆங்கிலம், கணிதம் ஆகிய பாடங்களை கற்பிப்பதில் சிறந்து விளங்கியமையால், மாணவர்களும், ஆசிரியர்களும் அவரைச் சுற்றியே வலம்வரும் சூழ்நிலை உருவாகியது. ஒரே சமயம் மக்கள் மத்தியிலும், கல்லூரியில் மாணவர்கள் மத்தியிலும் அவரது செல்வாக்கு உயர்ந்தது.

கல்லூரி மாணவர்கள் எவ்வித தயக்கமும் இல்லாமல், எந்நேரத்திலும் அவரை அணுகி பிரச்சினைகளையும், சந்தேகங்களையும் தீர்த்துக் கொள்ளுமளவுக்கு அவரது எளிமையான அணுகுமுறை அமைந்திருந்தது. அவரிடம் கல்வி கற்ற மாணவர்களில் கணிசமானவர்கள் முற்போக்கு எண்ணம் கொண்டவர்களாகவும், கம்யூனிஸ்ட் கட்சியின் உறுப்பினர்களாகவும் இணைந்திருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

இலங்கையில் வாழ்ந்துவரும் மூவின மக்கள் மத்தியில் நிலவும் இனமுரண்பாடுகள் குறித்து, அதிலும் குறிப்பாக தமிழ், முஸ்லீம் மக்கள் மத்தியில் நிலவும் முரண்பாடு குறித்துப் பேசப்படும் இன்றைய சூழ்நிலையில், தோழர் கார்த்திகேசனின் அந்நாளைய செயற்பாடு எல்லோராலும் பாராட்டப்பட்டது. 1955ம் ஆண்டு நடைபெற்ற மாநகரசபைத் தேர்தலில் தோழர் கார்த்திகேசன் வெற்றிபெற்றபோது, அன்றைய யாழ் நகரச் சனத்தொகையில் எண்ணிக்கையில் மிகவும் சிறுபான்மையினராக இருந்த முஸ்லீம்கள் மத்தியிலிருந்து தெரிவு செய்யப்பட்ட எம்.எம். சுல்தானை யாழ் நகர மேயராக்குவதில் முக்கிய பங்கு வகித்தார். தமிழ் காங்கிரஸ், தமிழரசுக் கட்சிகள் மக்கள் மத்தியில் இனவாதப் பிரசாரங்களை விதைத்துவந்த காலகட்டத்தில், முஸ்லிம் ஒருவரை மேயராக்குவதில் தோழர் கார்த்திகேசனின் அயராத உழைப்பும், மக்கள் மத்தியில் அவருக்கு இருந்த அபரிமிதமான செல்வாக்குமே முக்கிய காரணமாக இருந்தது. எக்காலத்திலும் இன, மத, சாதி வேறுபாடுகளுக்கு அப்பாற்பட்ட ஒரு சிறந்த கம்யூனிஸ்ட்டாக அவரது வாழ்வும் நடைமுறையும் அமைந்திருந்தது. 1966ம் ஆண்டின் பிற்பகுதியில் வடபகுதியில் தீண்டாமைக்கு எதிராக, ஒடுக்கப்பட்ட மக்கள் கிளாந்தெழுந்து போராடிய சமயம், அப்போராட்டங்களில் முன்னணிப் பாத்திரம் வகித்தவர்கள் பெரும்பாலும் தோழர் கார்த்திகேசனின் அரசியல் மாணவர்களாகவே இருந்தார்கள். அவரால் ஊட்டி வளர்க்கப்பட்ட கருத்துகளும், கொள்கைகளும், நிலப்பிரவுத்துவத்தின் மிச்ச சொச்சமாக இருந்த சாதியமைப்பைத் தகர்த்தெறியும் வீரியம் மிக்க சக்தியாக மேலெழுந்தது.

ஆலயங்கள், தேனீர்க்கடைகள் மற்றும் பொது இடங்களில் சாதியின் பெயரால் கடைப்பிடிக்கப்பட்ட தீண்டாமைக்கு எதிராக, சகல சமூகங்களையும் சேர்ந்த முற்போக்காளர்களும் முஸ்லிம் இளைஞர்களும் இணைந்து இன, மத அடையாளமின்றி ஒன்றுபட்டு நின்று போராடினார்கள். இந்தப் போராட்டங்களின் வெற்றியில் அவரது அர்ப்பணிப்பாலும், அயராத உழைப்பாலும் ஊட்டி வளர்க்கப்பட்ட கம்யூனிஸ்ட் கட்சி முக்கிய பங்காற்றியதும் குறிப்பிடத்தக்கது.

தோழர் கார்த்திகேசன், அக்காலத்தில் தான் கற்ற கல்வியைக் கொண்டு அரசின் உயர் பதவிகளைப் பெற்றுக் கொள்வதற்கான வாய்ப்புகள் இருந்தபோதிலும், மாணவப் பருவத்திலேயே ஏற்றுக்கொண்ட கொள்கைக்காக வாழ்வின் இறுதிவரை ஆசிரியத் தொழிலை மேற்கொண்டு, மக்கள் மத்தியில் கம்யூனிஸ்ட் கொள்கைகளை விதைத்து வந்தார். தான் ஏற்றுக் கொண்ட கொள்கைக்காக இறுதிவரை போராடியவர். ஆசிரியராகவும் அதிபராகவும் பணியாற்றியபோதிலும், இறுதிவரை தனக்கென ஒரு சொந்த வீடு கூட இல்லாது வாழ்ந்து மறைந்த உன்னத தலைவர். எளிமையான உடை, நடை, பாவனை கொண்ட அவரை கட்சித் தோழர்களும், சாதாரண மக்களும் எந்நேரமும் அணுகக்கூடிய ஒருவராகவே வாழ்ந்தார். அவர் தனது துவிச்சக்கர வண்டியில் கட்சிக் காரியாலயத்திற்கோ, நண்பர்களிடத்திற்கோ செல்லும் சமயங்களில், அவரை மக்கள் உரிமையோடு வழிமறித்து, தமக்குள்ள குறைபாடுகள், தேவைகள் குறித்து அரச அதிகாரிகளுக்கு ஆங்கிலத்தில் கடிதம் எழுதித் தருமாறு கேட்பதும் வழக்கமான ஒன்றாகும். தனது துவிச்சக்கர வண்டியின் 'சீற்'றில் வைத்து அவர்களது கோரிக்கைக் கடிதத்தினை எழுதிக் கொடுப்பது அவர் வாழ்ந்த காலத்தில் நாளாந்த நிகழ்வுகளாகியிருந்தன. தோழர் கார்த்திகேசன் தனது வாழ்நாள் முழுவதும் ஏழை எளிய மக்களினதும் தொழிலாளி, விவசாயிகளின் உற்ற நண்பனாகவும் தோழனாகவும் விளங்கினார்.

பாடசாலை விடுமுறை காலங்களில் பின் தங்கிய கிராமங்களுக்கு குடும்பத்துடன் சென்று அங்குள்ள வீடுகளில் பல நாட்கள் தங்கியிருந்து கிராமத்திலுள்ள இளைஞர்களுக்கு தொடர்ச்சியான அரசியல் வகுப்புகளை மேற்கொள்வதை வழமையாகக் கொண்டிருந்தார். இந்த வகுப்புகளின் மூலம் கிராமத்திலுள்ள உழைப்பாளி மக்கள் அரசியல் விழிப்புணர்வு பெறுவதற்கும், பொதுவுடமைக் கருத்துக்களை மக்கள் மத்தியில் கொண்டு செல்வதற்கும், ஓய்வு ஒழிச்சலின்றி உழைத்தார்.

யாழ்ப்பாணத்திலுள்ள பிரபல கல்லூரிகளின் உயர் வகுப்பு மாணவர் மன்றங்களின் இராப்போசன விருந்து வைபவக் கூட்டங்களுக்கு சிறப்புச் சொற்பொழிவாளராக தோழர் கார்த்திகேசனையே பெரும்பாலும் அழைப்பார்கள். அவரது பேச்சில் அவரால் முன்வைக்கப்படும் ஆணித்தரமான கருத்துக்களும், அதிலும் தனக்கேயுரிய பாணியில் நகைச்சுவையோடு கலந்து பேசும் அவரது ஆற்றல் பிரசித்தமானது.

தமிழிலும் ஆங்கிலத்திலும் பேசும் சிறந்த பேச்சாளராக விளங்கினார். நகைச்சுவை, கேலி, கிண்டல் என்பன கலந்த பேச்சாற்றலைக் கொண்டு விளங்கினார். தோழர் கார்த்திகேசனின் நூற்றாண்டு தின நிகழ்வுகள் நடைபெறும் இக்காலப் பகுதியில் அவரால் அரசியல் ரீதியாக வளர்க்கப்பட்ட பலர் சிறந்த பேச்சாளர்களாகவும், எழுத்தாளர்களாகவும், பல்கலைக்கழக விரிவுரையாளர்களாகவும், துறைசார் வல்லுனர்களாகவும் விளங்குவதைக் காணமுடிகின்றது. புலம் பெயர்ந்து பல்வேறு நாடுகளிலும் வாழ்பவர்கள் பலர், தோழர் கார்த்திகேசனின் மாணவர்கள் என்று தம்மைச் சொல்லிக்கொள்வதில் பெருமைப்படுகின்றனர்.

இதேபோன்று தற்போதும் இலங்கையின் பல்வேறு பகுதிகளிலும் இடதுசாரிகளாகவும் முற்போக்குவாதிகளாகவும் அரசியலில் ஈடுபட்டு வருபவர்களில் பலர் 'கம்யூனிஸ்ட் கார்த்திகேசனின் மாணவர்க'ளாகவே இருப்பதும் அவரது அப்பழுக்கற்ற பொதுவாழ்வுக்கு சிறப்புச் சேர்ப்பதாகவே அமைகின்றது.

■ ■ ■

# தோழர் மு. கார்த்திகேசன்: பரந்துபட்ட மக்கள் தளத்துக்குரிய கதிர்வீச்சு


- ந. இரவீந்திரன் -

கொம்யூனிஸ்ட் கார்த்தி-கேசன், கார்த்திகேசன் மாஸ்டர் என இடதுசாரிகள் மற்றும் கல்விப்புலத்தினர் மத்தியில் நினைவு கூரப்பட்டு வந்த மகத்தான ஓர் ஆளுமையின் நூற்றாண்டு ஜுன் மாதத்தில் நிறைவு பெற்றதன் பேரில், ஜுலை மாதத்தில் யாழ்ப்பாணத்தில் கூட்டம் ஒன்று இடம்பெற்றிருந்தது. இலங்கையின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் பலதரப்பட்டவர்கள் வந்து கலந்து கொண்ட இக்கூட்டம் அளவுக்கு வேறெந்த முற்போக்காளர்களுக்கான நினைவுக் கூட்டம் ஏதும் இலங்கையில் இதுவரை நடந்ததில்லை என்ற குறிப்புகளைக் காண முடிந்தது. யாழ்ப்பாணத்தில் அவ்வப்போது தோழர் கார்த்திகேசன் தொடர்பான நினைவு-களை மீட்டும் வகையிலான நிகழ்வுகள் இடம்பெறத் தவறியதில்லை. ஆயினும் அவரது பங்களிப்பின் காத்திரத்துக்குரிய கனதியோடு யாழ்ப்பாணச் சமூகம் அவரை மனதில் பதித்து வைத்திருப்பதாகச் சொல்வதற்கில்லை. குறிப்பாக, வருடாந்தம் அவரது நினைவு சார்ந்த ஒன்றுகூடல் நிகழ்வு இடம்பெற்று வரவில்லை.

மாறாக கொழும்பில் 'கார்த்திகேசன் நினைவுக்குழு' ஏற்பாட்டில் வருடந்தோறும் கார்த்திகேசன் நினைவுப் பேருரைகள் இடம்பெற்று வந்துள்ளன. இவ்வருடம் கொழும்பில் நூற்றாண்டு நினைவுக் கூட்டம் ஒன்றை நடத்துவதோடு எதிர்காலத்தில் அத்தகைய நினைவுப் பேருரைகள் எதனையும் முன்னெடுக்கப் போவதில்லை என அக்குழுவின் தலைமை உறுப்பினர்கள் கூறுவதனை கேட்கக் கூடியதாக உள்ளது. மிகவும் காத்திரமான விடயங்களை பேசுபொருளாக கொண்ட ஆற்றல் மிக்க ஒரு ஆளுமையின் நினைவுப் பேருரைகளைத் தொடர இயலாது இருப்பது ஏன்?. ஏற்கனவே இடம்பெற்று வந்த கூட்டங்களுக்கு நேர்ந்த புறக்கணிப்புகளினால் அவர்கள் இந்த முடிவுக்கு நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளனர். இருப்பினும், இந்த நூற்றாண்டு நினைவலைகள் இத்தகைய பின்வாங்கலுக்கு இடமளிக்காது தொடர்ச்சியாக நமது ஆளுமைகளை கொண்டாடவும் அடி-யொற்றி முன்னேறவும் ஏற்ற வாய்ப்பை பெருக்க வேண்டும் என எதிர்பார்ப்போம்!

மக்கள் விடுதலைக்காக அர்ப்பணிப்போடு உழைத்தவர்களும் அத்தகையோருக்கு கலங்கரை விளக்காக அறிவொளி ஊட்டிய ஆசான்களும் முக்கிய கவனிப்பைப் பெற இயலாமல் போனதற்கு பல காரணங்கள் உள்ளன. மூன்று தசாப்தங்கள் நீடித்த யுத்தமானது கருவி காவியவர்களே போராளிகள் என நம்பும் அளவுக்கு வன்முறை மனப்பாங்கை வளர்த்து விட்டுள்ளது. இனக்குரோதங்கள் மேலோங்கிய சூழலில் மனுக்குல விடுதலையை முன்னிறுத்திய சமூகப் போராளிகளான இடதுசாரிகள் காணாமல் ஆக்கப்படும் கருத்தியல் கொடூரம் நேர்ந்தது. இது நமது மண்ணுக்கு மட்டுமே உரிய நிகழ்வுப் போக்குமல்ல. மனுக்குல விடுதலை எனும் எழுச்சி வேகம் சென்ற நூற்றாண்டின் எழுபதாம் ஆண்டுகள் வரை பேரெழுச்சியாக முன்னேறி வந்த போது மிரண்டு போன சுரண்டல் கும்பல் திட்டமிட்டவகையில் வளர்த்துவிட்ட மக்களிடையே மோதலுக்கு உரியதான இன - மத - தேசிய - நிற பேதக் குரோதங்கள் இன்றைய கெட்ட போரிடும் உலக நியதியை முன்னணிக்கு உரியதாக்கி உள்ளது. தமர் X பிறர் எனும் பகுப்பு இன்று வலுப்பட்டு விட்டது. ஒவ்வொரு சமூகப் பிரிவும் தத்தமது சுயதம் பட்டப் பெருமைகளை முன்னிறுத்தி மற்றவரை சக மனிதப் பெருமிதத்துக்கு உரிமை கோர இடமற்றவர்களாக கருதும் அடையாள அரசியல் செல்நெறி இன்றைய உலக நிலவரத்தை தீர்மானிக்கும் பொதுப் போக்கு. இதன் பொருள், மேலோங்கி வந்துள்ள பழமைவாதப் பிற்போக்கு மனப்பாங்கு வலதுசாரிகளின் கையோங்குவதற்கு வழிகோலியுள்ளது.

மக்கள் நலநாட்டக் குறிக்கோளுடன் இயங்கிய இடதுசாரிகள் கண்டுகொள்ளப்படாமல் போனதற்கும் மக்கள் விரோத வலதுசாரிகள் ஜனநாயகத்தின் பெயரால் தலைமை சக்திகள் ஆகிவிட்டமைக்கும் எதிரிகளின் சதி எனப் புறக்காரணி மீது மட்டும் பழிபோட்டு அமைதி கண்டு கொள்ள இயலாது. இடதுசாரிகள் இழைத்த தவறுகளுக்குரியதான அகக் காரணிகளும் கவனிப்புக்குரியன. அறுபதாம் ஆண்டுகள் வரை இடதுசாரிகள் வரலாற்றுச் செல்நெறியைத் தீர்மானிக்கும் பலமிக்க சக்திகளாகத் திகழும் நிலை உலக அளவிலானதாக இருந்தது - மூன்றாம் உலக நாடுகளில் இலங்கை இவ்விடயத்தில் முன்னணிப் பாத்திரம் வகித்தது. இடதுசாரி அணி 1964ல் சோவியத் - சீனப் பிளவின் பின்னர் தத்தமது நாடுகளின் விவகாரங்களை முதன்மைப்படுத்தி இயங்குவதனை விடவும் சோவியத் - சீனச் சார்பான கோட்பாட்டு விவாதங்களை மேலான பணியாகக் கருத முற்பட்ட போது முதற் சரிவைச் சந்தித்தது. மக்கள் மத்தியில் செல்வாக்குடன் இயங்கிய கொம்யூனிஸ்ட் கட்சிகள் எழுபதாம் ஆண்டுகளில் மென்மேலும் மயிர்பிளக்கும் விவாதங்களை நடத்திப் பிளவின் மேல் பிளவடைந்து சிறு குழுக்களாக சிதறிப்போயின. முன்னதாக அர்ப்பணிப்புடன் இயங்கிய ஆளுமைகள் முன்னர் வேறுபட்ட கருத்துக்களுடனும் பொதுக் குறிக்கோளின் பொருட்டு ஒன்றுபட்டு இயங்கியதை போலன்றி எழுபதுகளைத் தொடர்ந்து ஏதாவது ஒரு குழுவின் பிரதிநிதிகளாகினர். அவர்களது பங்களிப்பு சார்ந்த ஆளுமை வீச்சுடன் அவர்களை வழிபாட்டு நாயகர்களாக கொண்டாடிய அடுத்த தலைமுறையினர் ஏனைய இடதுசாரி சக்திகளோடு ஒன்றுபட்டு இயங்குவதற்கான களங்களை இனங்காண முயல்வதாயன்றி தத்தமது வழிபாட்டு நாயகர்களின் பரம ரசிகர்களாய் ஏனைய தலைவர்கள் மீது சேறு வாரித் தூற்றும் போக்கு மேலோங்கத் தொடங்கியது. முற்போக்குத் தலைவர்களைத் தவறாக எடை போடும் காரணிகளை மக்கள் விரோதிகள் பிரச்சாரப்படுத்தியதை விடவும் உள்வீட்டு சகோதரர்களே இவ்வண்ணம் செய்து முடித்திருந்தனர்.



இந்தப் பின்னணியில் தான் தோழர் கார்த்திகேசன் பரந்துபட்ட மக்கள் தளத்தில் கவனிப்பை பெறாதுள்ளமையைக் காண வேண்டும். இத்தகைய தலைவர் வழிபாடு எமது இடதுசாரித் தலைவர்கள் இன நல்லிணக்கத்திற்கும் மக்களின் பன்முகப்பட்ட வாழ்வியல் விருத்திக்கும் செய்திருந்த பங்களிப்புகளை மூடி மறைத்து எவ்வகையில் கேடு விளைவித்துள்ளது என்பதற்கு உதாரணமாக ஒரு சம்பவத்தை இங்கு குறிப்பிடலாம். நான்கு வருடங்களின் முன்னர் 'புதிய தளம்' சஞ்சிகையின் இரண்டாவது இதழுக்கு எம்.ஏ.சி. இக்பால் பேட்டி ஒன்றினை வழங்கியிருந்தார். யாழ்ப்பாண முஸ்லிம் வார்ட் பிரதேசத்தைச் சேர்ந்த இக்பால் சாதியத் தகர்ப்புப் போராட்டத்திற்கு பங்களித்தது உட்பட சண்முகதாசன் தலைமையிலான கொம்யூனிஸ்ட் கட்சியின் வட பிரதேச தலைவர்களில் ஒருவராக இயங்கிய தனது அனுபவங்களை விரிவாக அந்தப் பேட்டியில் முன்வைத்திருந்தார். மிகப்பெரும் கம்னியூஸ்ட் கட்சியாக இருந்து குமாரிலால், வட்சன் பெர்ணாந்து, ரோஹண விஜயவீர போன்றவர்களோடு நமது பங்குக்கு கார்த்திகேசன், வி.ஏ. கந்தசாமி, கே.ஏ. சுப்பிரமணியம் போன்றோரின் 'துரோகத்தனமான பிளவுகளினால்' சண் ஆதரவு குழுவுக்கு உரியவர்களாக தாம் மாறி இருந்தமையை இக்பால் வெளிப்படுத்தியிருந்தார். இத்தனை பேர் விலகுவதற்கு தமது தலை-வரிடம் இருந்திருக்கக்கூடிய தவறினைச் சுய விமர்சன ரீதியாக அலசாமல் எழுந்தமானத்துக்கு ஏனைய தலைவர்களை எல்லாம் துரோகிகள் என முத்திரை குத்துவதில் உள்ள பாதகம் பற்றி அவர் பொருட்படுத்திக் கொள்ளவில்லை. அவரிடம் சண் ஆதரவு குழு ரசிகர்கள் ஏற்படுத்தி இருக்கக்கூடிய செல்வாக்கின் காரணமாக சண்முகதாசனை அப்பழுக்கற்ற தலைவராக காட்டுவதும் ஏனையவர்கள் சந்தேகத்துக்கிடமின்றி துரோகிகளே என்ற தீர்ப்பை வலியுறுத்துவதும் அவருக்கான பணியாக அப்போது இருந்து விட்டது.

இப்போது கார்த்திகேசன் நூற்றாண்டின் பொருட்டு 15 வருடங்களுக்கு முன்னர் எம்.ஏ.சி. இக்பால் எழுதியிருந்த ஒரு கட்டுரை முகநூலில் மறுவெளியீட்டைக் கண்டிருந்தது. கார்த்திகேசன் நினைவு குழுவினர் வெளியிட்டிருந்த தொகுப்பு நூலுக்காக எழுதப்பட்டிருந்த அந்தக் கட்டுரையில் முஸ்லிம் மக்கள் மத்தியில் கார்த்திகேசன் பெற்றிருந்த செல்வாக்கும் அதன் பேரில் தாம் எல்லாம் கொம்யூனிஸ்டுகள் ஆவதற்கு உந்துதல் பெற்றிருந்தமைக்கான அடிப்படை சம்பவம் ஒன்றை பேசுபொருள் ஆக்கியிருந்தார் இக்பால். யாழ் மாநகரசபையில் இரண்டு வார்டுகள் மட்டுமே முஸ்லிம்களாக இருக்க பத்துமடங்கு எண்ணிக்கையில் தமிழ் மக்களுக்கான வார்டுகள் இருந்த போதிலும் 1955ம் ஆண்டில் ஒரு முஸ்லிம் தலைவர் மேயராக இயலுமானதற்கு அந்த வருடம் மாநகர சபை உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டிருந்த தோழர் கார்த்திகேசனின் முன்முயற்சியே காரணம் என மேற்படி கட்டுரையில் இக்பால் விளக்கியிருந்தார். இதனை எழுதி பத்து வருடங்களின் பின்னர் எடுக்கப்பட்ட 'புதிய தளம்' சஞ்சிகைக்கான பேட்டியில் யாழ் மாநகர சபையில் முஸ்லிம் ஒருவர் எவ்வாறு மேயராக முடிந்தது என்ற கேள்விக்கு தமிழ் காங்கிரஸ் கட்சி - தமிழரசுக் கட்சி என்பவற்றுக்கு இடையேயான முரண்பாட்டின் காரணமாகவே அது சாத்தியப்பட்டது எனத் தோழர் இக்பால் கூறியிருந்தார். பலதரப்பட்ட மக்களிடமும் செல்லக்கூடிய ஒரு சஞ்சிகையில் சண்முகதாசனை வழிபாட்டுக்குரியவராகக் காட்டி, கொம்யூனிஸ்ட் இயக்கம் பின்னடைந்தமைக்கு தோழர் கார்த்திகேசன் போன்றோரது 'துரோகங்களே' காரணம் எனக் கூற வேண்டியிருந்தமையால் ஒரு ஆளுமையின் மகத்தான பங்களிப்பு இவ்வகையில் இருட்டடிப்பு செய்யப்பட்டிருந்தது.

இதனை இங்கு கூறுவது கார்த்திகேசன் நூற்றாண்டு நினைவுக் கட்டுரை என்பதால் அவரை வழிபாட்டுக்குரியவராக்கி தோழர்கள் சண்முகதாசன், இக்பால் போன்ற ஆளுமைகளை வில்லன்களாக சித்திரிப்பதற்காக அல்ல. இடதுசாரி இயக்கத்தில் ஏற்பட்ட தலைவர் வழிபாடு தமது ஆளுமையின் விஸ்வரூப பிரம்மாண்டத்தை காட்டும் பொருட்டு ஏனையவர் பங்க

தொடர்தல் 87ம் பக்கம்

# தோழர் மு. கார்த்தி...

86ம் பக்கத் தொடர்ச்சி...

ளிப்பை முடி மறைத்து வில்லன்களாக வர்ணித்தமையால் ஏற்பட்ட பாதக விளைவை எடுத்துரைப்பதற்காக என் பதை மறவாதிருப்போம். தவிர, கார்த்திகேசன் நூற்றாண்டு நிறைவுற்ற கையோடு அடுத்த வருடம் ஜுலை மாதம் (இந்த வருடம் - 2019 ஜுலை மாதம் முதல்) தோழர் சண்முகதாசன் நூற்றாண்டு நினைவுகூரப்பட உள்ளது. அடுத்தடுத்து வரும் இந்த இரு வருடங்கள் போல அவர்கள் ஓரணியில் செயலாற்றி ஏற்படுத்திய சாதனைகள் இணைவுக்குரியன. ஏற்பட்ட பிளவில் சரி - தவறுகள் பற்றிய தேடல் புதிய வரலாறு படைப்பதற்கான சரியான கோட்பாட்டை வகுப்பதற்கானதாக அமைய இயலுமே அன்றி ஒருவரை நாயகராகவும் மற்றவரை வில்லனாகவும் சித்திரிப்பதற்கானதாக அமைந்துவிடக் கூடாது. இருவரிடமும் சில விடயங்களில் சரிகளும் வேறு விடயங்களில் தவறுகளும் இருந்துள்ளன. எந்த ஒருவரும் தவறுகளுக்கு அப்பாற்பட்ட புனித விக்கிரகமோ வழிபாட்டு நாயகரோ கிடையாது - செயற்படாத ஒருவரே தவறு ஏதும் செய்யாது இருக்க இயலும்! பிளவடைந்து மோதியது எதாயினும் ஒரு தரப்பின் தவறினால் அல்ல!

அவர்கள் மாறுபட்ட கருத்துகளுடன் பிரிந்து சென்ற பின்னர் தான் அவர்களுக்குள் கோட்பாட்டு ரீதியான வேறுபாடு ஏற்பட்டது என்றாகிவிடாது. ஒன்றுபட்டு இயங்கிய அறுபதாம் ஆண்டுகளின் இறுதிப்பகுதி வரையில் கூட பல்வேறு விடயங்களில் வேறுபட்ட கருத்து நிலைகள் கொண்டிருந்தனர். அத்தகைய கருத்து வேறுபாடுகளுக்கு அப்பால் ஒரு இலக்கு நோக்கி போராடும் தோழமை உணர்வு கொள்ளும் வகையில் வரலாறு படைக்கும் மக்கள் சக்தியைக் கிளர்ந்தெழச் செய்து தலைமை தாங்கும் ஆற்றலை கொம்யூனிஸ்ட் கட்சி பெற்றிருந்தது. மகத்தான தொழிற்சங்கப் போராட்டங்கள், சாதியத் தகர்ப்புப் போராட்டங்கள் என்பவற்றில் கொம்யூனிஸ்டுகள் வீறார்ந்த போர்க்குணத்தையும் அர்ப்பணிப்பு உணர்வையும் வெளிப்படுத்தி இயல்பான மக்கள் தலைவர்களாகத் துலங்கினர். அதன்போது தமக்குள் ஏற்படும் மாறுபட்ட கருத்துகளை உட்கட்சி விவாதங்கள் வாயிலாக தீர்க்க முயன்றனர். ஒத்த கருத்தை எட்ட இயலாத இடங்களில் பெரும்பான்மையினர் முடிவுக்கு அமைய இயங்க ஏற்றவண்ணம் செயற்களம் தொடர்ந்து விரிவடைந்தவாறு இருந்தது. எழுபதுகளின் பின்னர் புறநிலையில் ஏற்பட்டு வந்த மாற்ற நிலைகளை சரியாக கணித்து மாறுபட்ட சூழல்களுக்கு அமைவான கோட்பாடுகளை வகுத்து ஏற்ற வேலை திட்டத்தை முன்னெடுக்க இயலாமல் போன போது வரலாறு இடதுசாரிகளின் கைகளை விட்டு நீங்கிப் போனது. போகவும், செயலற்ற நிலையில் குடுமிச் சண்டையும் தவறுகளை மற்றவர் மேல் சாய்த்துத் தனி வழி காண்பதுமான போக்குகள் வலுத்தன.

இத்தகைய சாதனைக் காலத்தினதும் பின்னடைவின் போதும் தோழர் கார்த்திகேசன் வகித்த பங்கும் பாத்திரமும் பற்றி சுருக்கமாக இங்கு பேசுவது அவசியமானது. அவர் குறித்த விரிவான வரலாறு வெளிவராத போதும் அடிப்படையான அம்சங்களை கண்டுணர ஏற்றதான சில நூல்கள் பிரசுரமாகி உள்ளன. இங்கு ஒரு முற்போக்கு ஆளுமையின் சாராம்சமிக்க பண்புக் கூறுகள் அலசப்படுவதன் வாயிலாக அவர் குறித்த தேடலை தூண்டுவதற்கு முயல்வேன். வர்க்க அணி சேர்க்கையில் தொழிலாளர் தலைமையை உத்தரவாதப்படுத்துவது கொம்யூனிஸ்ட் கட்சியின் முதல் பணி என்ற வகையில் முன்னதாக அதனை பார்ப்போம். தொடர்ந்து, மிகப்பெரும் சாதனையாக சாதியத் தகர்ப்புப் போராட்டத்தை இலங்கை கொம்யூனிஸ்ட் கட்சி முன்னெடுத்தமையையும் பின்னடைவு காரணியில் முதன்மையாக விளங்கும் தேசிய இனப் பிரச்சினைக் களத்தையும் அலசுவோம்!

## வர்க்கப் போராட்ட களம்:

மலேசியாவில் தொழில் புரிந்த தந்தையுடன் வாழ்ந்தவர், மாணவ பருவத்தை நிறைவு செய்வதற்கு முன்னர் இலங்கை பல்கலைக்கழகத்தில் உயர் கல்வியைப் பெறும் பொருட்டு தாயகம் திரும்பியிருந்தார் தோழர் கார்த்திகேசன். வலுவான தொழிற்சங்கங்களை கட்டியெழுப்பிச் சமூக மாற்றச் சிந்தனையை விதைக்கும் முன்னேற்ற திசையில் இருந்த கொம்யூனிஸ்ட் கட்சியினால் ஈர்க்கப்பட்ட கார்த்திகேசன் பட்டதாரியாக உயர் பதவிகளை அலங்கரிக்கக் கூடிய வாய்ப்பிருந்தும் அவற்றை உதறித் தள்ளி கட்சியின் முழுநேர ஊழியராக தனது வாழ்க்கைப் பயணத்தை தொடங்கினார். கட்சியின் பல்வேறு தளங்களில் பணியாற்றிய அதே வேளை அவரது கல்விப்புல சிறப்பு காரணமாக கட்சிப் பத்திரிகை துறையில் கூடுதலாகக் கவனம் செலுத்தும்படி வலியுறுத்தப்பட்டார். குறிப்பாக அவரது ஆங்கிலப் புலமை காரணமாக ஆங்கிலப் பத்திரிகையின் ஆசிரியர் குழு தலைமையை அலங்கரித்தார்.

வட பிரதேசத்தில் ஏற்கனவே சமசமாஜக் கட்சி தோழர் தர்மகுலசிங்கம் தலைமையில் இடதுசாரித்துவம் செயல் வீச்சினை முன்னெடுத்து வந்துள்ளது. குறிப்பாக யாழ்ப்பாணம் இடதுசாரி இயக்க வரலாற்றில் வீறுமிக்க பங்களிப்பை ஆற்ற உள்ள சாதியத் தகர்ப்புக் களத்துக்குரிய முதற்கட்ட பணியை தர்மகுலசிங்கம் அவர்களே தொடக்கி வைத்து இருந்தார். இருப்பினும் சமசமாஜக் கட்சியின் கோட்பாட்டு - நடைமுறைப் பாதகங்களை கடந்து அடுத்த படிநிலை வளர்ச்சியில் இடதுசாரி இயக்க செல்நெறியை வளர்க்கும் பணியை வட பிரதேசத்தில் முன்னெடுக்க வேண்டுமென இலங்கை கொம்யூனிஸ்ட் கட்சி உணர்ந்து கொண்ட போது அதற்குத் தலைமை ஏற்று இயக்க வல்லவராக தோழர் கார்த்திகேசனைக் கட்சி இனங்கண்டு யாழ்ப்பாணத்துக்கு அவர் அனுப்பி வைக்கப்பட்டார்.

இவ்வகையில் கொம்யூனிஸ்ட் இயக்கத்தை யாழ்ப்பாணத்தில் தொடக்கி வைத்தவர் கார்த்திகேசன் எனும் வரலாற்றுச் சிறப்பு மங்காத வகையில் அவரது செயல் வீச்சு கனங்காத்திரம் உடையதாக இருந்தது. கொழும்பு உட்பட தென்னிலங்கை மற்றும் மலையகம் போன்ற பகுதிகளில் வலுவான தொழிற்சங்கங்கள் அமைய ஏற்றதான தொழில் துறைகளும் பெருந்தோட்ட உற்பத்தி துறைகளும் காணப்படுவது போன்ற களம் அல்ல வட பிரதேச நிதர்சனம். இருப்பினும் புதிதாக தொடங்கி இருந்த காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலை, பரந்தன் இரசாயன தொழிற்சாலை போன்றவற்றில் இணைந்திருந்த தொழில்துறை பாட்டாளி வர்க்கத்தினரும் சுருட்டு தொழிலாளர்கள் போன்ற பல்வேறு துறைகள் சார்ந்த உதிரித் தொழிலாளர்களும் அமைப்பாக்கப்பட்டு, தொழிற்சங்கங்களின் சம்மேளனத்துக்குரிய உறுப்பினர்கள் ஆவதற்கு கார்த்திகேசன் முழு ஈடுபாட்டுடன் உழைத்தார். ஒவ்வொன்றிலும் தொழிலாளர் நலன் பேணும் நடவடிக்கையோடு வேலைநிறுத்தப் போராட்டம் போன்ற நிகழ்வுகளில் சோர்வறியாது தொழிலாளர்கள் அனைவரும் செயலாற்ற அவசியமான வழிமுறைகளையும் மேற்கொண்டார். குறிப்பாக சீமெந்துத் தொழிற்சாலையில் தொழிலாளர்கள் மேற்கொண்ட வீரஞ்செறிந்த வேலை நிறுத்தப் போராட்டத்தின் போது தொழிலாளர் உரிமைகள் தொடர்பாகப் போதம் ஊட்டவும் தளர்வறியா உற்சாகத்தைத் தொழிலாளர்கள் தொடர்ந்து பேணவும் கார்த்திகேசன் காட்டிய அக்கறை விதந்துரைக்க தக்கது. இதுகுறித்து நீர்வை பொன்னையன் தனது தன் வரலாற்று நூலான 'நினைவலைகள்' இல் விரிவாக பதிவு செய்துள்ளார். தொழிலாளர் போராட்ட களங்களில் எப்போதும் பிரசன்னமாகி போராடுபவர்களது உத்வேகத்தை வளர்த்தெடுப்பதைப் போன்றே பொது மக்கள் மத்தியிலான பிரசாரக் கூட்டங்கள் நிறைவடைந்த பின்னர் மேடைகள் அகற்றப்படுவது வரை அப்பணிகளில் பங்கேற்று பூரணமிக்க ஈடுபாட்டைக் காட்டுபவராக கார்த்திகேசன் திகழ்ந்துள்ளார்.

தொழிற்சங்கங்களை கட்டியெழுப்புவதற்கு காட்டிய அக்கறைக்கு சற்றும் தளராத வகையில் விவசாயிகள் சங்கங்களை கட்டுவதற்கான முக்கியத்துவத்தையும் உணர்ந்தவராக அதனை நடைமுறைப்படுத்தி இருந்தார். கார்த்திகேசனின் வழிப்படுத்தலுடன் விவசாயிகள் சங்கத்தில் பொறுப்பேற்று இயங்கிய நீர்வை பொன்னையன் அது குறித்தும் விரிவாக எழுதியுள்ளார். வன்னிப் பிராந்திய விவசாயிகளது போராட்டங்கள் குறித்த நீர்வையின் சிறுகதைகள் ஒப்பீடற்ற தனித்துவம் மிக்கவை - களத்தில் செயற்பட்டு பெற்ற அனுபவச் செழுமையோடு உணர்வு பொங்க படைக்கப்பட்டவை அவை.

யாழ்ப்பாணத்தின் தொழிலாளர் - விவசாயிகள் மத்தியில் பணியாற்றுவதே சமூக மாற்றத்தில் பெரும்பங்காற்றலாகிவிடாது எனும் வகையில் அன்றைய யாழ்ப்பாணம் இலங்கை பூராவுக்குமான பல்துறை ஊழியர்களை வெளிக்கொணரும் கல்விப்புல செறிவுடையதாக இருந்தது. அவ்வகையில் ஆசிரியத் தொழில் யாழ் சமூகத்தைப் பொறுத்தவரை ஒரு கொம்யூனிஸ்ட்டுக்கான வலுமிக்க செயற்களமாகும். இதனை நன்குணர்ந்த கொம்யூனிஸ்ட் கட்சி தனது ஆற்றல் மிக்க பணியாளரை ஆசிரியத் தொழிலை ஏற்கும்படி பணித்தது. முழுநேர ஊழியராக கார்த்திகேசன் தொடர்ந்திருப்பின் ஆற்றியிருக்கத்தக்க பங்களிப்புக்கு சற்றும் குறையாத வகையில் பெரும் சாதனைகளை ஒரு ஆசிரியராக செயற்பட்டும் நிறைவேற்றி உள்ளார். ஆசிரியர் / தோழர் கார்த்திகேசன் ஒரு மைய சக்தியாக விளங்கி மார்க்சிய இயக்கம் யாழ் மண்ணில் புதிய தளம் நோக்கி விகசிக்க காத்திரமான பங்களிப்பை நல்கியமை பற்றி பலரும் தமது பதிவுகளில் வலியுறுத்தி உள்ளனர்.

## சாதியத் தகர்ப்பு:

தொழிலாளர் - விவசாயிகள் - மாணவர்கள் - ஏனைய இனத்தவர்கள் - வெகுஜனச் செயற்களம் எனும் பல்வேறு தளங்களில் முன்னணி சக்தியாகத் திகழ்ந்த அளவுக்கு சாதியத் தகர்ப்புப் போராட்ட அணியின் முதன்மை பங்களிப்பினை தோழர் கார்த்திகேசன் கொண்டிருக்கவில்லை. இதன் பொருள் சாதிமுறை தகர்க்கப்பட வேண்டும் என்பதில் அவருக்கு அக்கறை இல்லை என்பதல்ல. வர்க்க அமைப்புத் தகர்க்கப்படும்போது சாதி முறையும் அற்றுப்போகும் என்பதால் அவர் அளவில் பிரதான தளத்தில் தீவிர கவனம் செலுத்துவதற்கு முக்கியத்துவம் அளித்து இருந்தார். தவிர, ஒருவர் அனைத்து தளங்களிலும் தன்னை முன்னிறுத்திக் கொள்ள அவசியமும் இல்லை. இந்த களத்துக்கு பூரண ஆதரவை நல்கியபடி தனக்குரிய பணிகளில் ஆற்றல்மிகு பங்களிப்பை வழங்கியிருந்தார் என்பதிலேயே கார்த்திகேசனின் ஆளுமை விகசிப்பு வெளிப்பட்டிருந்தது.

சாதியத் தகர்ப்புப் போராட்ட வழிமுறையில் பெரும் ஈடுபாடு அவருக்கு இருந்ததில்லை என்பதை அவருக்கு மட்டும் உரிய குணாம்சமாக கருதவேண்டியதில்லை. அவர் மீது பெருமதிப்பை கொண்டிருந்த ஒரு தோழரிடம் சாதியத் தகர்ப்புப் போராட்டம் ஏற்படுத்தியிருந்த மாற்றங்கள் பற்றி உரையாடிய போது, அது அப்படி என்ன பெரிதாகச் செய்து விட்டது எனும் எதிர்க் கேள்வியை கேட்டார். கார்த்திகேசன் நினைவுக் குழுவின் மிக முக்கியமான அந்த தலைமைத் தோழரின் இந்த எதிர் கேள்வி முதலில் பெரும் வியப்பை தருவதாக இருந்த போதிலும் பின்னர் அதற்கான அடிப்படையைப் புரிந்து கொள்ள இயலுமாயிருந்தது. தலைமை வழிபாட்டு ரசிக மனப்பாங்கு நோய்க்கூறு அது. கார்த்திகேசனை மீறி வேறு ஆளுமைகள் முன்னணி வகித்த ஒரு களம் பெரிதாக சாதித்து விட்டது என்பதை ஏற்றுக் கொண்டால் அவரது பக்தி விசுவாசத்துக்குப் பங்கம் ஏற்பட்டு விடுமல்லவா?

கொம்யூனிஸ்ட் கட்சிகளின் பிளவுகளின் பின்னரும் கார்த்திகேசனுடன் இணைந்து அவருடனான மத்திய குழுக்களில் சேர்ந்து இயங்கிய தோழர் மூர்த்தி அவர்களும் சாதியத் தகர்ப்புப் போராட்ட வழிமுறைகளில் தவறு இருந்ததாக நேரடிப் பேச்சில் எனக்கு கூறியிருந்தார். சாதிமுறைக்கு எதிரான போராட்டத்தில் கட்சி ஆயுத மேந்தியது தவறு, மாறாக தேசிய இன ஒடுக்குமுறைக்கு எதிராகவே ஆயுதபாணியாகியிருக்க வேண்டும் என மூர்த்தி வலியுறுத்தினார். இந்தக் கருத்தை அப்படியே கார்த்திகேசன் கொண்டிருக்காவிட்டாலும் சாதி எதிர்ப்புப் போராட்டக் களத்தில் முன்னணிப் பாத்திரத்தை அவர் வகித்திருக்கவிருக்கவில்லை என்பது ஒரு வரலாற்று உண்மை. அதற்காக அவரை நேசிப்பவர்கள் அந்த வரலாற்றுச் சாதனையைக் குறைமதிப்பீடு செய்வதன் பேரில் தோழர் கார்த்திகேசனைக் குறை விளங்க வேண்டியதில்லை. கார்த்திகேசனின் மார்க்கத்தை ஏற்று இயங்கிய நீர்வை பொன்னையன் தனது 'நினைவலைகள்' நூலில் சாதியத் தகர்ப்புக் களங்களில் தாம் பங்கேற்றதை வலியுறுத்தியிருப்பது அப்போராட்டத்தின் வரலாற்றுப் பங்களிப்பை எவ்வளவு தூரம் மதித்தார்கள் என்பதற்கான சிறந்த எடுத்துக் காட்டாகும்.

இந்தக் களத்தில் முன்னணியில் அவர் வெளிப்பட்டிருக்காத போதிலும் சாதியத் தகர்ப்புப் போராட்ட வரலாற்றில் அவரது பெயர் ஆழப் பதிந்துள்ளது. டானியல், டொமினிக் ஜீவா போன்ற இலங்கையின் புகழ்பூத்த படைப்பாளிகள் தங்களது சமூகச் செயல் வீச்சுக்குக் களம் அமைத்துத் தந்ததில் கார்த்திகேசனின் பங்களிப்பை விரிவாகப் பதிவிட்டுள்ளனர். தமிழகத்தில் இருந்து இலங்கைக்கு தலைமறைவுப் பணியின் பொருட்டு வருகைதந்திருந்த ப. ஜீவானந்தம், கார்த்திகேசன் வீட்டில் தங்கியிருந்தபோது அவர்களிடமிருந்து கற்றுக் கொண்ட விடயங்களை டானியலும் டொமினிக் ஜீவாவும் எழுதிச் சென்றுள்ளனர். டானியலுக்கு முன்னரே தலித் இலக்கிய முன்னோடியாக களம் இறங்கியிருந்த என்.கே. ரகுநாதன் தோழர் கார்த்திகேசனிடமிருந்து பெற்ற மற்றொரு உயர் பண்பை வெளிப்படுத்தியிருக்கிறார். இலங்கை திராவிட முன்னேற்றக் கழக அங்குரார்ப்பணக் கூட்டத்துக்கு கொம்யூனிஸ்ட் கார்த்திகேசன் தனது வீட்டில் இடம் கொடுத்திருந்தார். சாதியத் தகர்ப்புக் கருத்தியல் காரணமாகத் தொடக்கப்பட்ட இலங்கை திராவிட முன்னேற்ற கழகத்தை விடவும் கார்த்திகேசனின் கொம்யூனிஸ்ட் கட்சி காத்திரமான வகையில் சாதியத்தகர்ப்புப் போராட்டங்களை முன்னெடுப்பது கண்டு தான் பின்னர் கொம்யூனிஸ்ட் கட்சியை வரித்துக்கொண்டதாக ரகுநாதன் கூறுவார்.

மாற்றுக் கருத்தாளர்களோடு ஐக்கியப்பட்டு இயங்கி, வலிந்து தம் பக்கம் இழுக்க முயலாமலே சரியான செயற்பாட்டு வளர்ச்சி வாயிலாக வசீகரிக்க இயலும் என்பதற்கு அன்றைய கொம்யூனிஸ்ட் கட்சி தோழர் கார்த்திகேசன் வாயிலாக எடுத்துக்காட்டாகி உள்ளது.

தொடர்தல் 89ம் பக்கம்

# கார்த்திகேசனும் பெண்கள் முன்னேற்றத்தில் அவரது பங்களிப்பும்

**- ஜானகி பாலகிருஷ்ணன் கார்த்திகேசன் -**

சீன மார்க்சியக் கொள்கையாளர் தோழர் மாஓ சேதுங் அவர்கள் கம்யூனிஸ்டுகள் பற்றிக் கூறுகையில் "கம்யூனிஸ்டுகள் எப்பொழுதும் உண்மைக்காக வாதாடத் தயாராக இருக்க வேண்டும். காரணம், உண்மை என்பது மக்களின் நலன்களுக்குச் சாதகமானது. கம்யூனிஸ்டுகள் எப்பொழுதும் தமது தவறுகளைத் திருத்திக் கொள்ளத் தயாராக இருக்க வேண்டும். காரணம் தவறுகள் மக்களின் நலன்களுக்கு பாதகமானவையாகும்". இவ்வாறு எடுத்துரைத்த தோழர் மாஓ சேதுங் மேலும் கூறுகையில் "கம்யூனிஸ்டுகள் எப்பொழுதும் விஷயம் ஒவ்வொன்றையும் ஏன்? எப்படி? என்று ஆராய வேண்டும். தமது தலைகளைப் பாவித்து அது யதார்த்தத்திற்குப் பொருந்துகிறதா - இல்லையா, உண்மையில் அது நல்ல ஆதாரமுடையதா - இல்லையா, என்று கவனமாகச் சிந்திக்க வேண்டும். எவ்விதத்திலும் ஒன்றைக் கண்மூடித்தனமாகப் பின்பற்றி அடிமைத்தனத்தைப் பின்பற்றக் கூடாது" என்றார்.

அமரர் கார்த்திகேசன் அவர்கள் இச்சிந்தனைகளின்பால் ஈர்ப்புக் கொண்டு, அவ்வாழ்வை மற்றவர்களுக்கும் கற்பித்து ஒரு உன்னத சமுதாய வளர்ச்சிக்கும் விடுதலைக்குமாக போராடிய போராளி. சமுதாய நலனுக்காக தனிப்பட்ட, குடும்ப வாழ்வில் பல தியாகங்களை செய்த தியாகி. ஒரு தந்தையாக நாம் இழந்தது என்பதனை விட ஒரு சமூகமாக நாம் பெற்றுக்கொண்டதை பெருமையாக உணர்கிறோம். ஒரு 'பெண்' என்ற வழமையான வரையறைகளை தகர்த்து துணிச்சலையும் தன்னம்பிக்கையையும் தைரியத்தையும் தந்து வளர்த்தவர் எம் தந்தை.



இன்று வடபுலத்தில் பலவற்றிற்குப் பஞ்சம். பொதுவுடைமையாக இருந்த நிலத்தடி நீர் பல பாகங்களில் உவரானதாலும், சில இடங்களில் தனி உடமையாளர்களின் அசமந்த போக்கால் மாசடைந்ததாலும் சுத்தமான குடிநீருக்குப் பஞ்சம். தனி உடமை என அமைக்கப்பட்டு சீமெந்து கட்டடங்களால் நிறைந்த நகர்ப்புறங்களிலே, பொதுவுடைமையாக இருந்த நல்ல சுவாசக் காற்றுக்குப் பஞ்சம். வீடுகளில் இருக்கவேண்டிய குப்பை, கூழங்கள் அனைத்தும் வீதிகளில் வீசியெறியப் பட்டதனால் நல்ல சுற்றுப்புறச் சூழலுக்கும் பஞ்சம். அது மாத்திரமன்றி பொதுவுடைமைவாதி அமரர் கார்த்திகேசனின் நூற்றாண்டு நினைவு தின நிகழ்ச்சியில் பேசுவதற்கு பெண் பேச்சாளருக்கும் பஞ்சம்.

ஆன்மீகப் பேச்சாளர்கள் உள்ளார்கள், ஆனால் சமூகநலன் பற்றிப் பேச பெண்கள் இல்லாததனால் போலும் இந்நாளில் இந்தியாவிலிருந்து பேச்சாளர்களை இறக்குமதி செய்கிறார்கள்.

கார்த்திகேசனுடன் இணைந்து செயற்பட்ட முற்போக்காளரான ஒரு பெண்மணியின் சந்திப்பு நான் சிறுமியாக இருக்கும் போது எனக்கு ஏற்பட்டது. ஒருதடவை கைதடிக்கு எங்களைக் குடும்பமாக அழைத்துச் சென்றார். அங்கே நான் கண்ட பெண்மணிதான் திருமதி. வேதவல்லி கந்தையா. அவருடைய பேச்சில், நடையில், செயலில் இருந்த ஆளுமையைக் கண்டு வியந்து போனேன். கைதடியில் உள்ள நெசவாலை, விழிப்புலன் இழந்தோர் நிலையம் என்று தானே முன்னின்று நடத்திய, நாம் முன்னெப்போதும் பார்த்திராத இடங்களையும், விடயங்களையும் காண்பித்தார். நான் சிறுமியானதால் அவர்களது உரையாடலை அதிகம் புரிந்து கொள்ள முடியாவிட்டாலும், அவ்வாறான ஆளுமையும், செயற்பாட்டுத் திறனும் உள்ள ஒரு பெண் எனது தந்தை கார்த்திகேசனுடன் நட்பாக இருந்தது, எனக்கு மிகுந்த பெருமையைத் தந்தது. அவ்வாறான ஒரு பெண்மணியாக கார்த்திகேசனுடன் கட்சியில் இணைந்து செயற்பட்டவர் வேதவல்லி கந்தையா அவர்கள்.

கார்த்திகேசன் அவர்களுக்கு குடும்பத்தில் ஐந்து பெண்பிள்ளைகள் இருந்ததனால் அவருக்கு பெண்களின் முன்னேற்றத்திற்கான பங்களிப்பு காத்திரமாக இருந்திருக்கும் எனப் பலரும் எண்ணலாம். கார்த்திகேசனின் பங்களிப்பு பெண்கள் முன்னேற்றத்தில் அதற்கும் அப்பாற்பட்டது. அவரது ஒவ்வொரு ஈடுபாடும் ஒரு சந்ததிக்கு முன்பானது. அந்தவகையில் 'கார்த்திகேசனும் பெண்கள் முன்னேற்றத்தில் அவரது பங்களிப்பும்' என்பதாக எனது அனுபவப் பகிர்வு - தந்தை பற்றியதாகவும், ஒரு கம்யூனிஸ்ட் தோழர் பற்றியதாகவும், ஒரு பொதுவுடைமைவாதி பற்றியதாகவும் அமையவிருக்கிறது.

கார்த்திகேசனின் குடும்பம் எக்காலமும் பெண்கள் சூழ்ந்த ஓர் இல்லமாகவே இருந்தது. ஆண்கள் மட்டும் கல்வி கற்கட்டும் பெண்கள் அவர்களுக்கு வீட்டு வேலைகள் செய்து ஒத்தாசையாக இருக்கட்டும். பெண்களுக்கு ஏன் கல்வி? என்று சமூகத்தில் பலர் எண்ணிய காலத்திலேயே கார்த்திகேசன் பெண் கல்வியை ஊக்குவித்தவர். அவர் ஒரு கல்விமான் என்பதும், ஒரு சிறந்த ஆசிரியர் என்பதையும் விட, பெண்கள் கல்வி கற்க வேண்டும் என்பது பற்றிய பரந்த உயரிய நோக்கும் கொண்டிருந்தவர். அவரதும், அவரது மனைவியரதும் உறவினர்கள் தங்கள் பெண் பிள்ளைகளை யாழ்நகரில் அமைந்திருந்த அவரது வீட்டிலேயே தங்கி இருந்து கல்வி கற்கத் தூண்டியது. அவ்வாறு வந்து தங்கிக் கற்றவர்கள் வட்டுக்கோட்டை, சித்தன்கேணி போன்ற இடங்களிலிருந்து மட்டுமல்லாது, மலேசியாவிலிருந்து வந்திருந்து தங்கிக் கற்றவர்களும் உண்டு. அதைவிட அவரது இரு இளைய சகோதரிகள், அவரது புத்திரிகள் என்று வீடு நிறைந்து கல்வி கற்கும் பெண்களே சூழ இருந்தார்கள்.

தற்காலத்தில் வடபுலத்தில் ரியூஷன் வகுப்பு என்றால், பாடசாலைகளில் உள்ளது போலவே மேசை, கதிரை, வாங்கில்கள் என்று அடுக்கி, அந்த இடம் மாணவர்களால் நிறைந்து இருக்கும். கார்த்திகேசன் வீட்டிலும் வெளி விறாந்தையில் ரியூஷன் நடக்கும். அதற்கு ஒரு பெரிய மேசை, அதன் இருபக்கத்திலும் இரு நீளமான வாங்கில்கள், மறுபக்கங்களில் ஒவ்வோர் கதிரை. ஏழெட்டு மாணவர்கள் அதிகாலையிலேயே வந்து இரு வாங்கில்களையும் நிரப்பி உட்கார்ந்திருப்பார்கள். இன்றைய ரியூஷன் வகுப்புகளில் ஆசிரியர் முழக்கமாகக் கற்பிப்பார். கார்த்திகேசனின் ரியூஷன் வகுப்பில் மாணவர்கள்தான் இடையிடையே கொல்லென்று சிரிப்பது கேட்கும். கார்த்திகேசன் அவர்கள் பாடசாலையில் தனது வகுப்பை சுவாரஸ்யமாக, நகைச்சுவை நிறைந்ததாக நடத்துவதாக அறிந்த சில மாணவர்கள், அந்தப் பாக்கியம் தமக்குக் கிடைக்காததால் இந்த வாங்கிலில் இடம்பிடிக்க முந்தியிருக்கிறார்கள் என்றும் கேள்விப்பட்டதுண்டு. அந்தக் காலத்தில் இந்த ரியூஷன் வகுப்பை மேலோட்டமாகப் பார்த்த மாணவிகளின் பெற்றோர் சிலர் கார்த்திகேசனிடம் தமது பெண்பிள்ளைகளையும் ரியூஷன் வகுப்பில் சேர்த்துக் கொள்ளுமாறு கேட்பார்கள். கார்த்திகேசன் மறுப்புத் தெரிவிக்க மாட்டார். பெண்களின் கல்வி எவ்வளவு முக்கியம், எவ்வளவு அக்கறையுடன் எடுக்கப்பட வேண்டும் என்பது அவருக்குத் தெரியும். கார்த்திகேசனுக்கு மிகுந்த கெட்டிக்கார சகோதரி ஒருவர் இருந்தார். துரதிஷ்டவசமாக அவரது சகோதரிக்கு ஒரு ஆசிரியையாக தொழில் செய்யும் வாய்ப்பு அமையவில்லை. தன்னை நாடி வந்த மாணவிகளின் அறிவுப் பசியை நீக்குவதற்கு, தனது சகோதரியிடம் தரமான கல்வியைப் பெற்றுச் செல்ல ஒழுங்கு செய்து கொடுப்பார். அவ்வாறு வாழ்க்கையில் முன்னேறிய பெண்கள் பலருண்டு.

கார்த்திகேசன் ஓர் ஆசிரியராக இருந்தும் தான் பெற்ற பிள்ளைகளின் அன்றாடக் கல்வி பற்றி என்றுமே கவலைப்பட்டதில்லை. அவரும், அவரது மனைவியும் தம்மை நம்பி வந்த உறவினரிலிருந்து, தனது புதல்வியர் அனைவரையும் யாழ். நகரிலுள்ள மிகப் பிரசித்தி பெற்ற பெண்கள் பாடசாலையான வேம்படி மகளிர் கல்லூரியில் சேர்த்துவிட்டனர். அதிலும் அப் பாடசாலையின் அந்நாள் மிகச் சிறந்த அதிபராக செல்வி. மேபிள் தம்பையா கடமையாற்றிய காலப்பகுதி. செல்வி. தம்பையாவும் கார்த்திகேசன் அவர்களும் கொழும்பு பல்கலைக்கழகத்தில் ஒன்றாக கல்வி பயின்றவர்கள். செல்வி. தம்பையா நன்றாகவே பாடசாலையை நடத்துவார், கல்வியும் தரமானதாகவே இருக்குமென நம்பிக்கை கொண்டதனால், தன் புதல்வியரின் கல்விக்கு தனது மேற்பார்வை அவசியமில்லை என்று திடமாக நம்பினார். அதே போன்ற மதிப்பும், மரியாதையையும் செல்வி. தம்பையா அவர்களும் கார்த்திகேசன் மேல் வைத்திருந்தார். இருந்த போதும் மெதடிஸ்ட் கல்லூரியில் கல்வி கற்று, அதனோடு இணைந்த தேவாலய முறைப்படி வாழ்ந்து வந்த செல்வி. தம்பையா அவர்கள், கார்த்திகேசனின் கம்யூனிஸ, பொதுஉடமை வாழ்வு பற்றி சீண்டிப் பார்ப்பார். சில வேளைகளில் பாடசாலையில் கட்டணம் கட்டாதவர்கள் அதிபர் காரியாலயம் முன் நிறுத்தி வைக்கப்படுவர். அதில் கார்த்திகேசனின் புதல்வியரும் நிற்க வேண்டி வந்தால், 'ஏன், கார்த்திகேசனுக்கு அவருடைய

தொடர்தல் 89ம் பக்கம்

# கார்த்திகேசனும்...

88ம் பக்கத் தொடர்ச்சி...

பாடசாலையில் சம்பளம் கொடுக்கிற தில்லையா?' என்று சிரித்துக் கொண்டே கேட்பாராம். ஆனால் அவரும் ஒரு தட வையேனும் கட்டணம் கட்டினால் மட் டுமே பாடசாலைக்கு வரமுடியும் என்று நிபந்தனை போட்டதில்லை. காலம் தாழ்த்தினாலும் உரிய கட்டணம் செலுத் துப்படும் நேர்மைத்தன்மையையும் நம் பிக்கையையும் வளர்த்தவர் தந்தை கார்த்திகேசன் அவர்கள்.

கார்த்திகேசனின் சமூக விடுதலைச் செயற்பாடுகள் பெண்கள் கல்வியோடு சார்ந்ததாக மட்டும் இருக்கவில்லை. அதனுடன் கூடவே விதவைப் பெண்கள், கணவனைப் பிரிந்து வாழும் பெண்கள் போன்றவர்களின் முன்னேற்றத்துக்காக வும் பெரும் பாடுபட்டவர். விவாகரத்து என்பது மிகஅருமையாக வழக்கத்தில் இருந்த காலம். பெண்ணியவாதம் எனும் சொல் இலங்கைத் தமிழ் அகராதியில் இடம்பிடித்திருக்க முடியாத காலம். அக் காலம்தொட்டே பெண்கள் விடுதலைக் காகவும் விழிப்புணர்வுக்காகவுமான முன் னோடியாக திகழ்தவர். காரத்திகேசன் வீட்டில் உதவி செய்யும் ஒருவர், அவர் ஒருநாள் கார்த்திகேசனை அணுகி தனது அன்புக்குரிய ஒரே மகள் அவளது கண வனால் குடிபோதையில் வந்து அடித்துத் துன்புறுத்தப்படுகிறார் என்று முறைப்பட் டார். ஒரு சில நாட்களில் வெளி விறாந்தையில் இருந்த ரியூஷன் மேசை, வாசல்நடுவே இழுத்து வைக்கப்பட்டு வழக்காடு மன்ற மேசையாக மாற்றி ஊர் விதானையார் வந்து விசாரணை நடை- பெற்று அவர்களுக்கிடையிலான பிணக்கு தீர்த்து வைக்கப்பட்டது. ஒரு சமூகத்தின் விடுதலை என்பது இவ்வாறான குடும்ப விடுதலையில் இருந்துதான் ஆரம்பிக்க வேண்டும் என்பதன் உதாரணமாக அவற்றை செய்து வந்தவர் கார்த்திகேசன் அவர்கள்.

அவர் ஆசிரியராக இருந்த யாழ். இந் துக்கல்லூரியில் வருடாந்த இராப்போசன விருந்துக்கு மாணவர் தலைவருக்கு ஆங்கிலத்தில் பேசுவதற்கு பேச்சுத் தயார் செய்து, பழக்கிக் கொடுப்பார் கார்த்திகே- கசன். இவ்விருந்திற்கு வேறு பாடசாலை மாணவர் தலைவர்களை வரவழைப்பது டன், ஒரு பெண் பாடசாலைத் தலைவி யையும் பேசுவதற்கு அழைப்பு விடுக் கப்படும். ஒரு தடவை யாழ் இந்து மக ளிர் கல்லூரியின் மாணவர் தலைவி யாழ் இந்துக்கல்லூரியில் வருடாந்த இராப் போசன விருந்தில் பேசுவதற்கு அழைக் கப்பட்டார். அவ்வாறான பேச்சு வழமை யான பேச்சை விடவும் திறமையான பேச்சாகவும் விருந்தினரைக் கவரும் பேச்சாக நடக்கும். இங்கே வரவேற்ற பாடசாலை மாணவர் தலைவருக்கும், வரவேற்கப்பட்ட மாணவர் தலைவிக்குமி டையே ஒரு சொற் சிலம்பம் போன்ற பேச்சாக அமைய வேண்டும். அதற்கு ஒவ்வொரு பேச்சாளரும் உடனே தயா ராகி பதிலளிக்குமுகமாகப் பேச வேண் டும். அந்த அளவிற்கு மாணவர்கள் திற மைசாலிகள் இல்லை. அந்தமுறை எதிர் பாராத விதமாக, வழமையைவிட மிகவும் நகைச்சுவையுடன் சுவாரசியமாக, பதி லுக்குப் பதில் ஆண், பெண் இரு பேச் சாளரும் பேசி வந்திருந்த அனைவரை யும் திகைப்பிற்குள்ளாக்கினர் - மாணவ தலைவர்கள். பின்புதான் இரகசியம் வெளியானது. ஒருவருக்கு ஒருவர் மட்டு மல்ல, ஏனையோருக்கும் தெரியாமல் இருவருக்குமே கார்த்திகேசனே பேச்சுத் தயார் பண்ணியும், பழக்கியும் கொடுத் துள்ளார். இவ்வாறு இளைய சமுதா யத்தை ஊக்குவிப்பதில் சளைக்காமல் அக்கறை கொண்டிருந்தார்.

தனது வீட்டிலே ஆங்கிலக் குறுக்கெழுத்து விளையாட்டை தனது மனைவி, சகோ தரி, வேறு உறவினர் அல்லது புதல்விய ருடன் எப்போதாவது அருமை பெருமை யாக விளையாடுவார். அவர் விளையா டும் போது சில வேளைகளில் மற்றவர் கள் பொருத்தமான சொல்லை வைத்து அதிக புள்ளிகள் ஈட்ட, அவ்விடங்களை தான் அடைக்காமல் விட்டுக் கொடுப் பதை அவதானிக்கலாம். அவ்வாறு செய் யும் போது, அவர் அதிக புள்ளிகள் எடுக்கும் அவாவினால் செய்வது போல தோற்றாது எவ்வாறு பொறுமையுடன் சிலவற்றை விட்டுக்கொடுத்து, புத்திசாது ரியமாக, அடைய வேண்டிய இலக்கை நோக்கி தக்கபடி நகர்த்தினால், அதிக வெற்றியீட்டலாம் என்பதை மற்றவர்க ளுக்கு காண்பிப்பது போல இருக்கும்.

கார்த்திகேசன் அவர்களைப் போலவே அவரது துணைவியார் வாலாம்பிகை அவர்களும் மக்கள் பணியில் அதேய ளவு ஆர்வத்துடனும், ஈடுபாட்டுடனும் செயற்பட்டார். குறிப்பாக நாச்சிமார் கோவிலடியில் வாழ்ந்தவர்கள் அனைவ ரும் வெவ்வேறு திசைகளிலிருந்து வந்து, தொழில்ரீதியாகக் குடியேறியவர்கள். அனைவரும் ஒரு பெரிய குடும்பமாகவே வாழ்ந்து வந்தனர். அயலவர்கள் கார்த்தி- கேசன் மீதும், அவரது மனைவியின் மீதும் வைத்திருந்த மதிப்பினாலும், மரியாதை யினாலும், அன்பினாலும் கார்த்திகேச னின் மனைவி தனது பிள்ளைகளையும், உறவினரையும் பொழுது போக்கிற்காக அழைத்துச் செல்லும் இடங்களுக்கு, தமது வயது வந்த பெண்பிள்ளைகளை அனுப்பி வைப்பர். பொது வாழ்வில் ஈடுபடுவோ ருக்கு கும்பத்தினை கவனிப்பதற்கான நேரம் அமைவதில்லை. இத்தனைக்கும் கார்த்திகேசன் தனது புதல்வியர் வாழ்வின் முன்னேற்றத்திற்கு என்ன பங்களிப்பு செய்திருப்பார் எனப் பலரும் கேட்கலாம். அவர் செய்ய வேண்டிய அவசியமான வற்றை செய்தார். பெருமளவில் அவரது வெவ்வேறு சமூக ஈடுபாட்டினாலும், செயற்பாடுகளினாலும் அவரது புதல்வியர் 'வாழ்வினை அனுபவங்களூடாக' பெற்று அதிலிருந்து கற்றதை வைத்து வாழப் பழகிக்கொண்டனர் என்பதுவே உண்மை.

அமரர் மு. கார்த்திகேசன் கல்வியின் முக்கியத்துவம் பற்றி 'களனி' தை-மாசி 1974ல் 'சோஷலிச சமுதாயத்தில் கல்வி' எனும் தலைப்பில் எழுதிய கட்டுரையில், 'முதலாளி வர்க்க சமுதாயம் ஆண்கள் அதிகாரம் செலுத்தும் சமுதாயம் ஆகும். எனவே கல்வியிலும் ஆண்-பெண் என்ற வேறுபாடுகள் காட்டப்படுவதோடு, பெண் பாலார்க்கு எதிரான பாரபட்சமான போக் குகள் நிலவுகின்றன. சோஷலிசத்தின் கீழ் கூட்டுக் கல்வியமைப்பு முறை இரு பாலாருக்கும் இடையிலான பாரபட்சத் திற்கு முடிவு கட்டுவதோடு, கல்வியின் சகல மட்டங்களிலும் இருபாலாருக்கும் சம சந்தர்ப்பம் அளிக்கிறது...' என பதி விட்டுள்ளார்.

கார்த்திகேசன் காலமாவதற்கு ஓரிரு வரு டங்கள் முன்புதான் பண்டத்தரிப்பு இந் துக் கல்லூரியின் அதிபராக இருந்து ஓய்வு பெற்றார். பண்டத்தரிப்பு இந்துக் கல் லூரி ஆசிரியக் கட்டமைப்பு, அமரர் கார்த்திகேசன் சமத்துவக் கல்வி பற்றி ஒரு முன்னோடியாகச் செயற்பட்டிருக்கி றார். அவருடன் தொழில் பார்த்த ஆசிரிய ஆசிரியைகளும், பெண் சேவகர்களும் அதை ஒரு சிறந்த அனுபவமாகவே கூறி யிருந்தனர்.

ஒருவர் பிறந்து 'வாழ்ந்து' விட்டு சென்றார் என்பதைக் காட்டிலும், அவர் வாழ்ந்து எதை 'விட்டுச்' சென்றார் என்பதிலேயே அவர் வாழ்கின்றார். அமரர் கார்த்திகே- கசன் அவர்கள் மக்களுக்காக 58 வரு டங்கள் மெய்யாகி வாழ்ந்து இருந்தத னால், 42 வருடங்கள் அவர் உருவாக் கிய அம்மக்களின் மனங்களிலும் கொண்ட கொள்கையின்பாலும் வாழ்ந்து கொண்டி ருக்கின்றார். இருப்பார்.

■ ■ ■

# தோழர் மு. கார்த்தி...

87ம் பக்கத் தொடர்ச்சி...

## தேசிய இனப்பிரச்சினை:

மார்க்சியத்தை வர்க்கப் போராட்ட முன் னெடுப்பின் பொருட்டு தொழிலாளி-விவ சாயி வர்க்கங்களை அணிதிரட்டும் முன் னணி பணியைக் கொண்ட தத்துநெறி யாக கருதும் மனப்பாங்கு இன்றுங்கூடப் பலரிடம் காணப்படுகிறது. சாதி / தேசிய இனப் பிரச்சினைகள் என வருகிறபோது சாதியவாத (தலித்திய), தேசிய இனவாத சக்திகளின் முன்னெடுப்புகளுக்கு உத் வேகம் வழங்குவதன் வாயிலாக அவர்கள் அப்பிரச்சினைக்கு தீர்வுகான உதவி நல்கி, முடிவை எட்டிய பின்னர் வர்க்கப் போராட்டக் களத்தை தெளிவாகக் கண் டடைய இயலும் எனக் கருதும் போக்கு பல மார்க்சியர்களிடம் ஏதோவொரு வடி வில் இருந்து வருகிறது. இன்று தமிழகத் தில் பல மார்க்சியர்களே முற்றிலும் தலித்தியவாத கருத்துக்களை முன்வைக் கின்றனர். இலங்கையில் தமிழ் தோழர் கள் பலர் தமிழ் தேசிய இன வெறியர் களோடு அவ்வப்போது தோளோடு தோள் சேர்ந்து இனவாத முழக்கங்களை எழுப் புகின்றனர்.

முன்னதாக அந்தத் தளங்களில் இயங் கியிருக்காத காரணத்தால் சாதிவாத, இனவாத சக்திகளின் நிலைப்பாடுகளை அந்தந்த தளங்களில் அப்படியே ஏற்கிற அவலம் மார்க்சியர்களுக்கு ஏற்பட்டுள் ளது. இலங்கையில் மார்க்சியர்கள் சாதி யத் தகர்ப்புப் போராட்டத்தை வெற்றி- கரமாக முன்னெடுத்த (நவீன இலங்கை வரலாற்றின் ஆயுதப் போராட்ட முன்னெ டுப்புகளில் அது மட்டுமே வெற்றி பெற் றிருந்தது) காரணத்தால் இலங்கை மார்க் சியர்கள் தலித்திய வாதத்துக்கு ஆட்பட வில்லை. அதேவேளை தேசிய இனப்பி ரச்சினையில் மார்க்சியர்களே தலைமை- யேற்று செயலில் இறங்க வேண்டும் என் னும் தெளிவு இன்னமும் பெறவில்லை. சாதிமுறை தகர்க்கப்படல், தேசிய இன ஒடுக்குமுறையை முறியடித்தல் என்பன வும் மார்க்சியத்தின் பணி எனப் புரிந்து கொள்ளும் போது எமக்கான சொந்த வேலைத்திட்டங்கள் கைவரும் சாதியவாத (தலித்திய) இனவாத சக்திகளின் செயற் பாடுகளை இரவல் வாங்க வேண்டிய அவசியம் ஏற்படாது. மார்க்சியத்தை வர்க்க வாதமாக மார்க்சியர்களே கருதுவதில் இருந்து இன்னமும் விடுபடவில்லை.

ஆயினும், சாதியத் தகர்ப்புப் போராட்ட அனுபவத்திலிருந்து இலங்கை மார்க்சி யர்கள் புதிய தளங்களை எட்டும் கோட் பாட்டு உருவாக்கங்களை கண்டறிந்துள் ளனர். வர்க்க அரசியலுக்கு மாற்றான திணை அரசியல் என்பதையும் இப்போது பேசுபொருளாக்கியுள்ளனர். இதன்வழி எமக்கான செயற்களம் விரிவாகும் போது அண்மைக் காலமாக நிலவி வரும் தேக் கமும் பாதக நிலைகளும் தகர்க்கப்படும். எதிரி வரையறுக்கும் போர்க்களத்தில் எதிர்வினை ஆற்றுவது என்ற இன்றைய கையறு நிலையில் நின்று நீங்கிப் புதிய தளத்தில் வரலாறு படைக்கும் உந்து தலை மாற்றிக்கொள்வர். சாதியத் தகர்ப் புப் போராட்டத்தில் முன்னணி வகித்த தலைவர்களில் வி.ஏ. கந்தசாமி தவிர ஏனையவர்கள் அனைவரும் சண் அணியில் இருக்க 1972ம் ஆண்டில் பிளவடைந்து சென்ற கார்த்திகேசன் அணியினர் இலங்கை கொம்யூனிஸ்ட் கட்சி (மார்க் சிஸ்ட்- லெனினிஸ்ட்) என இயங்கியிருந்த னர் (வி.ஏ. கந்தசாமி இந்த அணியின் மற்றொரு பிரதான தலைவர்). இவ்விரு அணிகளும் தேசிய இனப் பிரச்சினையை எவ்வாறு அணுகினர் என பார்ப்பது சுவா ரசியமானது.

தேசிய இனப் பிரச்சினையை சரியாக அணுகிச் சுயநிர்ணய உரிமையை ஏற்க வில்லை என்ற காரணி உட்பட நான்கு காரணங்களை முன்வைத்து 1978ம் ஆண்டு சண்முகதாசன் தலைமையில் இருந்து விலகி உருவான புதிய ஜனநாயக கட்சி இன்னமும் செயற்களத்தில் உள்ளபோது சண்முகதாசன் தனக்கான ஒரு ஆதரவா ளர் குழுவை மட்டும் உடையவராகச் செயலற்ற நிலைமைக்கு ஆளானார். செயலற்ற அந்த நிலையில் வெறும் ஆயுத வழிபாட்டு மனப்பாங்கில் தமிழீழ விடுதலைப் புலிகளின் மார்க்கத்துக்கு உத்வேகம் ஊட்டும் வகையில் பிரிவி னைவாதச் சுயநிர்ணய உரிமையை ஏற் பதாக பிரகடனப்படுத்தினார். இத்தகைய பாதக நிலைக்கு மாறாக, தேசிய இன முரண்பாடு கூர்மைபடத் தொடங்கிய எழுபதாம் ஆண்டுகளின் நடுக்கூறிலேயே கார்த்திகேசன் அணியினர் அதன்பால் கவனம் குவிக்க தொடங்கி இருந்தனர். அப்போது சமசமாஜக் கட்சி, இலங்கை கொம்யூனிஸ்ட் கட்சி (பீற்றர் கெனமன் - எஸ்.ஏ. விக்ரமசிங்க - வைத்திலிங்கம் அணி) என்பன பங்கேற்றிருந்த ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையிலான கூட்டரசாங்கம் அதிகாரத்தில் இருந்தது. அதனைச் சரியாகக் கணிப்பிட்டு ஐக்கிய முன்னணித் தந்திரோபாயத்தை மேற்கொள் ளத் தவறுகிறார் எனும் குற்றச்சாட்டையும் சண்மீது சுமத்தியவாறுதான் கார்த்திகே- கசன் அணியினர் தனிவழி சமைத்தனர் - ஒரு இடதுசாரி அரசாங்கத்துடன் ஐக்கி யத்துக்குரிய இடங்களைக் கவனம் கொள் ளாமல் போராட்டத்திற்கு உரிய அம்சங் களை மட்டும் சண் பார்த்தபோது போராட் டத்துக்கு உரிய விடயங்களை காணம றுத்துச் சரணாகதி வகைப்பட்ட ஐக்கி யத்தை கார்த்திகேசன் அணியினர் முன் னெடுத்தனர்.

இருப்பினும் தேசிய இனப் பிரச்சினை யின் அடிப்படையை கார்த்திகேசன் அணி யினர் சரியாகப் புரிந்துகொண்டு அவசி யப்பட்ட நடைமுறையை முன்னெடுக்கத் தலைப்பட்டிருந்தனர். பிரிவினையற்ற சுயநிர்ணய உரிமையை வலியுறுத்தும் வகையிலான அப்புதிய வேலைத் திட்டம் முன்னெடுப்பில் நிச்சயமாக தோழர் கார்த் திகேசனின் கோட்பாட்டு வழிகாட்டல் இடம் பெற்றிருக்கும். 'தமிழ் மக்கள் ஜன நாயக முன்னணி' எனும் வெகுஜன அமைப்பை அக்கட்சி உருவாக்கி அதன் செயற்பாடுகளில் பங்கெடுத்த பல தோழர் களது பதிவுகள் கார்த்திகேசனின் பங்கு - பாத்திரத்தை வெளிப்படுத்தியுள்ளன. அவர் மீது பெரும் மதிப்பை கொண்டி ருந்த தோழர் விசுவானந்ததேவன் அதன் தீவிர செயற்பாட்டு முனைப்பில் 'தமிழீழ தேசிய விடுதலை முன்னணி', 'தமிழீழ மக்கள் விடுதலை முன்னணி' என்ற பிரி வினை நிலைப்பாட்டிற்கு வளர்த்தெடுத்து சென்றமையில் கார்த்திகேசன் உடன்பா டற்றவர் என்பதை 'தோழர் விசுவானந்த தேவன் நினைவு மலர்' இல் தோழர் 'இயக்கச்சி' மணியம் எழுதியுள்ள விரி வான கட்டுரை வழியாக அறியமுடிகின் றது.

ஆக, கார்த்திகேசன் நூற்றாண்டில் அவ ரது பங்களிப்புகளை வெளிக்கொணரும் அவசியமுள்ள இவ்வேளையில் சரியான கண்ணோட்டத்துடன் - தனிநபர் வழிபாட்டு பக்தி மார்க்கத்தை கைவிட்டு அணுகும் போது, இலங்கை இடதுசாரி இயக்கத்தின் வீரியமிக்க பக்கங்களை மதிப்பீட்டுக்கு உள்ளாக்கும் கைங்கரியத்தையும் சாத்தி யமாக்கியவர்களாவோம். அதன்போது ஒரு ஆதரவுத் தளத்தினர்க்கு உரியவராக அன்றி பரந்துபட்ட வெகுஜனப் பரப்புக் குரிய ஒளிவீச்சு தோழர் கார்த்திகேசன் என உணர்வோம்.

■ ■ ■

# சோஷலிச சமுதாயத்தில் கல்வி

**கல்வியின் முக்கியத்துவம் பற்றி, 'களனி' இதழின் 1974ம் ஆண்டு தை - மாசி பதிப்பில் அமரர் தோழர் கார்த்திகேசன் எழுதிய பதிவிலிருந்து ஒரு பகுதி**

- மு. கார்த்திகேசன் -

வர்க்க சமுதாயத்தில் கல்வியின் அடிப்படையும், நோக்கமும் என்பதைப் பற்றி ஆராய்ந்ததின் பின்னால் 'களனி'யின் இந்த இதழில் சோஷலிச சமுதாயத்தில் கல்வியின் நிலைமையும் பாத்திரமும் என்ன? என்பதைப் பற்றி ஆராய்தல் நன்று.

ஆனால் ஒரு தெளிவான கருத்தைப் பெறுவதற்காக முதலில் சோஷலிசம் என்றால் என்ன? என்பதை ஒருவர் புரிந்து கொள்ள வேண்டும். இன்று இலங்கையில், சோஷலிசம் என்றால் உண்மையில் என்ன என்பது பற்றி அதிகமான குழப்பங்கள் நிலவுகின்ற காரணத்தால் இது அவசியமாகும். உற்பத்திக் கருவிகளின் மீதான அரசின் கட்டுப்பாடோ அல்லது உற்பத்திக்கருவிகளை அரசுடமையாக்குவதோ கூட சோஷலிசமாகாது. அரசு யாருடையது? என்பதே கேள்வியாகும். அரசு முதலாளித்துவ வர்க்கத்தினுடையதாக இருந்தால், அது முதலாளித்துவ சமுதாயமாகும். அரசு தொழிலாளி வர்க்கத்தினுடையதாக இருந்தால் மட்டுமே சமுதாயம் சோஷலிச சமுதாயமாக இருக்க முடியும்.

இவ்விரண்டு நிலைகளிலும் கல்வி சமுதாயத்தின் வர்க்க குணாம்சத்தில் இருந்து தனித்துவமுடையதாக இருக்காது. இருக்கவும் முடியாது. முதலாளித்துவத்தின் கீழ், முதலாளி வர்க்கத்தின் ஆட்சியை நிலைநிறுத்தும் சாதனமாக கல்வி செயல்படுகிறது. சோஷலிசத்தின் கீழ், ஆளும் வர்க்கமாகிய தொழிலாளி வர்க்கத்தின் நலன்களுக்காக கல்வி சேவை புரிகிறது.

இந்நிலையில் சோஷலிசத்தின் எதிரியாகிய முதலாளி, அதாவது தன்னை ஜனநாயவாதி என்று கூப்பிட விரும்புகின்ற இம் முதலாளித்துவவாதி, 'அப்படியானால் பிறகு என்ன வித்தியாசம்? இவ் இருவித மான கல்வி அமைப்பிலும் பாகுபாடு உண்டல்லவா? சோஷலிசக் கல்விக்காக வக்காலத்து வாங்கப்படுகின்ற மேன்மை எங்குள்ளது?' என்று கேட்கலாம். இதற்கான பதில் மிகவும் இலகுவானது. இது எண்ணிக்கையிலேயே காட்டப்படக் கூடியது. முதலாளித்துவக் கல்வி, சனத்தொகையில் 10 வீதத்தின் நலன்களுக்காக மட்டும் சேவை செய்யும். அதே வேளையில், சோஷலிசக் கல்வி, சனத்தொகையின் 90 வீதத்தினரின் நலன்களுக்காகச் சேவை செய்கின்றது.

தொகையில் மாத்திரமன்றி தரத்திலும் சோஷலிசக் கல்வி உயர்ந்தது. பத்து வீதத்தினரின் ஆட்சி ஜனநாயகமற்றது. அடக்கு முறையானது. யுத்தங்கள் நிறைந்தது. அழிவானதும் கூட. அதே வேளையில், தொண்ணூறு வீதத்தினரின் ஆட்சி ஜனநாயகமானது. கொடுமைகளிலிருந்து விடுவிப்பது. சமாதானம் நிறைந்தது. சிருஷ்டிகரமானது. சுருக்கமாகச் சொல்வதானால் இந்த இருவகைக் கல்விக்குமிடையிலான தர வித்தியாசம் குருவிச்சைக்கும் மாமரத்துக்கும் இடையிலான வித்தியாசத்தைப் போன்றது. இந்த வித்தியாசம், இன்னும் சரியாகச் சொல்வதானால், இந்த முரண்பாடு ஒவ்வொரு விஷயத்திலும் காணப்படக்கூடியதாக இருக்கின்றது.

முதலாளித்துவத்தின் கீழ் அநேகமாகத் தனியார், பொதுப்பாடசாலைகள் என இரட்டையமைப்பைக் கொண்ட பாடசாலைகள் உண்டு. தனியார் பாடசாலைகள் நல்ல வசதிகளைக்கொண்டிருப்பதோடு பணக்காரரான ஆளும் வர்க்கத்தினரின் பிள்ளைகளுக்கு மட்டுமே உரியதாயிருக்கின்றன. பொதுப்பாடசாலைகள் கட்டடங்கள், ஆசிரியர்கள், உபகரணங்கள், கல்வி வசதிகள் என்பவற்றைப் பொறுத்த வரையில் தனியார் பாடசாலைகளை விடத் தாழ்ந்த நிலையிலிருப்பதால் அதிகப்படியான பிள்ளைகள் இந்தத் தாழ்வான கல்வியோடு திருப்தியடைய வேண்டியி




ருக்கிறது. ஏழைக்கும் பணக்காரனுக்குமிடையிலான இந்த இடைவெளி - ஆளப்படும் வர்க்கத்துக்கும் ஆளும் வர்க்கத்திற்கும் இடையிலான இந்த இடைவெளி சோஷலிசத்தின் கீழ் நீக்கப்பட்டுவிடும். தனியார் பாடசாலைகள் இல்லாமல் செய்யப்படுவதோடு சகல பாடசாலைகளையும் அரசு கையேற்று நிர்வகிக்கிறது. புதிய பாடசாலைகளையும் அரசுதான் கட்டுகிறது.

மத ஸ்தாபனங்கள் பாடசாலைகளை உடமையாகக் கொண்டிருப்பதாலும், நடத்துவதாலும் மதத்தின் அடிப்படையிலான பாரபட்சத்திற்கு இது இன்னுமொரு மூலகாரணமாகின்றது. சோஷலிசத்தின் கீழ், பாடசாலைகள் அரசுடைமையாக்கப்படுகின்ற காரணத்தால் இத்தகைய பாரபட்சங்களும் நீக்கப்படுகின்றது. அது மட்டுமல்ல மத சம்பந்தமான விவகாரங்களுக்கு அங்கு எந்தவிதமான இடமும் அளிக்கப்படுவதில்லை. இவைகள் பாடசாலைகளிலிருந்து நீக்கப்பட்டு, அவற்றிற்குத் தகுந்த இடங்களாகிய வீடோ, தேவாலயமோ, கோவிலோ, மசூதியோ எதுவானாலும் அவற்றின் எல்லைகளுக்குள் கட்டுப்படுத்தப்படுகின்றன. அதற்குப் பதிலாகச் சகல மாணவர்களுக்கும் சமுதாய வளர்ச்சி பற்றிய விஞ்ஞானம் போதிக்கப்படுகின்றது.

அத்துடன் தற்போதைய வர்க்க சமுதாயம் ஆண் அதிகாரம் செலுத்தும் சமுதாயம் ஆகும். எனவே கல்வியிலும் ஆண்-பெண் என்ற வேறுபாடுகள் காட்டப்படுவதோடு, பெண்பாலார்க்கு எதிரான பாரபட்சமான போக்குகளும் நிலவுகின்றன. சோஷலிசத்தின் கீழ், கூட்டுக் கல்வி ஸ்ரீயமைப்புமுறை இருபாலார்க்கும் இடையிலான பாரபட்சத்திற்கு முடிவு கட்டுவதோடு கல்வியின் சகல மட்டங்களிலும் இருபாலார்க்கும் சம சந்தர்ப்பம் அளிக்கிறது.

வர்க்க சமுதாயத்தின் இன்னுமொரு அம்சம் தேசிய சிறுபான்மை இனங்களின் மீது அடக்குமுறையை மேற்கொள்கின்ற இன, மொழி, தேசிய பாரபட்சங்களாகும். சோஷலிசத்தின் கீழ் இத்தகைய பாரபட்சம் ஒழித்துக் கட்டப்படுவது மாத்திரமன்றி, அரசு கல்வி வசதி படைத்த சமூகத்தின் அல்லது இனத்தின் முன்னேறிய பிரதேசத்தின் மட்டத்தை பின் தங்கிய பிரதேசங்கள் எட்டிப்பிடிப்பதற்காக அவற்றின் கல்வியின் வளர்ச்சியைத் துரிதப்படுத்துவதில் விசேஷ கவனமும் செலுத்துகிறது.

இப்படியாக சோஷலிசம் ஒரு சர்வ வியாபமான ஒருமுகப்படுத்தப்பட்ட, விஞ்ஞான பூர்வமான அமைப்பைக் கொண்ட கல்வியை இன, மொழி, சாதி, தேசிய அல்லது ஆண் - பெண் பாகுபாடு என்ற எவ் வித பேதமின்றி சகலருக்கும் சமசந்தர்ப்பங்களுடன் வழங்குகிறது.

கல்வி இளைஞர்களுக்கு மட்டுமேதான் என்ற எல்லை வரம்புகளுக்குள் உட்படுத்தப்படுவதில்லை. வயது முதிர்ந்தவர்களுக்குக் கூட கல்வி வசதி தரப்படுகின்றது. ஏனெனில் முதலாளித்துவத்தின் இன்னுமொரு சாபக்கேடான எழுத்தறிவின்மையை ஒழித்துக் கட்டுவதை தனது கடமைகளுள் ஒன்றாக சோஷலிச அரசு கையேற்கிறது.

மேற்கூறப்பட்ட மாற்றங்கள் ஆழமானவையென்றாலும், இவை மட்டும் கல்வியிலே புரட்சியை உண்டு பண்ணமாட்டா. அடிப்படையானது என்னவெனில் கல்விக்கும் உழைப்புக்கும் இடையிலான தொடர்பேயாகும். புராதன சமுதாயத்தில் ஆதி காலக் கம்யூனிஸ காலகட்டத்தில் வர்க்கங்கள் இருக்கவில்லை. வாழ்வதற்காக சகலரும் உழைக்க வேண்டியிருந்தது. உழைப்பது வாழ்வின் நியதியாக இருந்தது. அத்துடன் சிறுவர்கள் பாடசாலைக்குச் செல்வதன் மூலமோ அல்லது புத்தகங்களைப் படிப்பதன் மூலமோ வேலை செய்யப் பழகிக்கொள்ளவில்லை. வேலை செய்வதின் ஊடாகவே வேலை செய்யப் பழகினார்கள். இப்படிக் கல்வி உழைப்புடன் இணைக்கப்பட்டிருந்தது. கல்விக்கும் உழைப்புக்கும் இடையிலான இந்த இணைப்பு சமுதாயத்தில் வர்க்கங்கள் தோன்றிய போது உடைந்தது.

ஆகவே சோஷலிசத்தின் கீழ் - வர்க்கங்களற்ற சமுதாயத்தையுடைய, விஞ்ஞான பூர்வமான கம்யூனிஸத்திற்கு வழி சமைக்கும் சோஷலிசத்தின் கீழ் - கல்வி திரும்பவும் உழைப்புடன் இணைக்கப்படுகிறது. உழைப்பு கல்வியின் ஒரு முக்கியமான, அத்தியாவசியமான பகுதியாக வருகிறது. மாணவர்கள் தொழிற்சாலைகளிலும் வயல்வெளிகளிலும் வேலை செய்கிறார்கள். இது மட்டுமின்றி அவர்கள் உழைப்பில் ஈடுபடும்போது உழைப்பைப் பற்றிய சரியான கண்ணோட்டத்தையும் கற்றுக் கொள்கிறார்கள். அவர்கள் உழைப்பில் ஈடுபடுவதையிட்டுப் பெருமையடைகிறார்கள். இங்ஙனம் கல்வி உழைப்புடன் இணைக்கப்படுகிறது. புத்தி ஜீவிகளும் தம்மை உழைக்கும் மக்களுடன் இணைத்துக்கொள்கிறார்கள்.

எனவே முதலாளித்துவத்தின் கல்வி, வர்க்க வித்தியாசங்களையும், வர்க்க அடக்குமுறையையும் நிலைநிறுத்துவதற்காக உதவும் அதேவேளையில், சோஷசலிசத்தின் கீழ் கல்வி, முதலாளித்துவ சித்தாந்தங்களின் அடிச்சுவடுகளை நீக்குவதற்காகவும் இறுதியாக வர்க்க பேதமற்ற சமுதாயத்தை நிறுவுவதற்காகவும் தனது பங்கைச் செலுத்துகிறது.

■ ■ ■

# காலத்தால் அழியாத தோழர் கார்த்திகேசன்

- சண்முகம் சுப்பிரமணியம் -

வடக்கில் கம்யூனிஸ்ட் இயக்கத்தை வேரூன்ற வைத்தவர் 'கம்யூனிஸ்ட் கார்த்திகேசன்' என இலங்கையின் வடபுலத்து மக்களாலும், 'காத்தார்' என யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மாணவர் சமூகத்தாலும் அன்புடனும், அர்த்தத்துடனும் அழைக்கப்பட்டு வந்த முருகுப்பிள்ளை கார்த்திகேசன் (மு.கா) அமரத்துவமடைந்து, இவ்வருடம் செப்ரெம்பர் மாதம் 10ம் திகதியுடன் 42 வருடங்கள் ஆகின்றது.

இந்த 42 வருடங்களில் அவர் பெரிதும் நேசித்து வந்த தமிழ் மக்களின் வாழ்விலும், உலக அரங்கிலும் எவ்வளவோ பிரமாண்டமான மாற்றங்கள் நிகழ்ந்தேறி விட்டன. இந்த மாற்றங்கள் நிகழ்ந்த போதெல்லாம், அவை பற்றி, கார்த்திகேசன் உயிருடனிருந்திருந்தால், என்ன கருத்துகளைக் கூறியிருப்பார், அவற்றுக்கு எத்தகைய தீர்வுகளை முன்வைத்திருப்பார், என்னென்ன நகைச்சுவைகளை அவிழ்த்திருப்பார் என, அவருடன் பழகிய பல்வகை மனிதர்களும் நிச்சயமாக ஊகங்களை வெளியிட்டிருப்பர்.

எமது மதிப்புக்குரிய ஆசானும், தோழருமான கார்த்திகேசன் 1919ம் ஆண்டு இப்பூமியில் அவதரித்து, 1977ல் இவ்வுலகைவிட்டு மறைந்தார். அவர் இப்பூவுலகில் வாழ்ந்தது மொத்தம் 58 ஆண்டுகள் மட்டுமே. சுமார் அரை நூற்றாண்டு கால இவ்வாழ்க்கையில், அவர் இலங்கை இடதுசாரி இயக்க வரலாற்றிலும், தமிழ் மக்கள் வாழ்விலும் பதித்து விட்டுச் சென்ற சுவடுகள் என்றும் காலத்தால் அழியாதவை.

உலக வரலாற்றில் சொற்ப காலம் வாழ்ந்தாலும், மனித சமுதாயத்துக்காக என்றென்றைக்குமாக தமது வாழ்வை அர்ப்பணித்துவிட்டுச் சென்ற, லெனின், சேகுவேரா, ஜூலியஸ் பூசிக், பகத்சிங், சுப்பிரமணிய பாரதி போன்றோரின் வரிசையில், எமது தேசத்தின் அழியாத சொத்தாக தோழர் கார்த்திகேசனும் இருக்கிறார் என்பதை நாம் எவ்வித தயக்கமும் இன்றி பெருமையுடன் சொல்லிக் கொள்ளலாம்.

தோழர் கார்த்திகேசன் தனது கல்லூரிப் படிப்பை மலேசியாவில் முடித்த பின்னர், தாயகம் திரும்பி இலங்கை பல்கலைக் கழக கல்லூரியில் ஒரு மாணவராகச் சேர்ந்து பட்டதாரியானார். பல்கலைக்கழகத்தில் கல்வி கற்கும் காலத்திலேயே அவர், ஏகாதிபத்திய எதிர்ப்பு நடவடிக்கைகளாலும், மார்க்சிய கொள்கைகளாலும் ஈர்க்கப்பட்டு, தன்னை ஒரு கம்யூனிஸ்ட்டாக வளர்த்துக் கொண்டார்.

அந்தக் காலத்தில் அவர் பல்கலைக்கழக கல்லூரியிலிருந்து வெளிவந்த 'மாணவர் செய்தி' (Student News) என்ற ஏட்டுக்கு ஆசிரியராக இருந்து எழுதிய கட்டுரைகளும் செய்திகளும் மாணவ சமூகத்தை மட்டுமன்றி, இலங்கையின் எதிர்கால அரசியல் தலைவர்களையே ஈர்ப்பனவாக இருந்தன. அதன் காரணமாக பிற்காலத்தில் இலங்கையின் சக்திவாய்ந்த அரசியல்வாதியாக மாறிய ஜே.ஆர். ஜெயவர்தனாவே, ஒரு சந்தர்ப்பத்தில் தனது செய்தியொன்றை அந்தப் பத்திரிகையில் பிரசுரிப்பதற்காக கார்த்திகேசனை நாடிச் சென்ற சம்பவமும் நிகழ்ந்தது.

பல்கலைக்கழகப் படிப்பை மிகவும் சிறப்பாக முடித்த கார்த்திகேசன், விரும்பியிருந்தால் இலங்கையின் மிகச் சிறந்த சிவில் நிர்வாக உத்தி யோகத்தர்களில் ஒருவராக வந்திருக்க முடியும். அல்லது முதலாளித்துவ அரசியல் கட்சியொன்றில் இணைந்திருந்தால் ஒரு அமைச்சராகக் கூட சில வேளைகளில் வந்திருக்கக் கூடும். ஆனால் அவர் அதற்கு மாறாக, கம்யூனிஸ்ட் கட்சியின் முழு நேர ஊழியர் என்ற கடுமையான, ஆனால் மக்களுக்கு உவகையுடன் சேவையாற்றக் கூடிய பாதையைத் தேர்ந்தெடுத்தார். கட்சிக்கு கிடைக்கும் மிகச் சொற்ப வருமானத்தில், தனது இளம் மனைவியுடன், கொழும்பு கொட்டா வீதியிலிருந்த கம்யூனிஸ்ட் கட்சி



காரியாலயத்தில், வேறு பல தோழர்களுடன் இணைந்து கிடைப்பதைக் கொண்டு வாழும் 'கம்யூன் வாழ்க்கை'யை வாழ்ந்தார்.

அவர் கொழும்பில் கட்சியின் முழு நேர ஊழியராக வேலை செய்த காலத்தில் கட்சியின் புகழ்மிக்க ஆங்கில வார ஏடான 'போர்வாட்' (Forward) பத்திரிகையின் ஆசிரியராகவும் கடமை யாற்றினார். இன்றைய பத்திரிகை ஆசிரியர்கள் போல், குளிரூட்டிய அறையிலோ அல்லது சுழலும் மின் விசிறிக்கு கீழோ அவர் அமர்ந்திருந்து பணி புரியவில்லை. பத்திரிகைக்கு அச்சுக் கோர்ப்பதிலிருந்து, அச்சிட்ட பத்திரிகைகளை மடித்து எடுத்துச் சென்று, வீதிகளில் கூவி விற்பது வரை, அவர் மிகக் கடினமாகவும், அர்ப்பணிப்புடனும் பணியாற்றினார். அந்த சூழ்நிலையில் தான், இலங்கையின் வடபுலத்தில் கட்சிக் கிளையொன்றை ஸ்தாபிக்கும் பொருட்டு, கம்யூனிஸ்ட் கட்சி அவரை யாழ்ப்பாணம் அனுப்பியது. அங்கு 1944ல் தன் மனைவி சகிதம் சென்ற அவர், கட்சிக்கு பொருளாதார ரீதியில் ஒரு சுமையாக இருக்கக் கூடாது என்ற எண்ணத்தில், யாழ். இந்துக்கல்லூரியில் சாதாரண ஆசிரியத் தொழில் ஒன்றைப் பெற்று, அங்கு கல்வி கற்பித்தபடியே, கட்சி அமைப்பு வேலைகளிலும் ஈடுபட்டார்.

அவரது ஆசிரியத் தொழில், அவரது கட்சிப் பணிகளுக்கு மிகவும் வாய்ப்பான ஒரு தொழிலாக அமைந்து கொண்டது. அவர் தன்னிடம் கல்வி கற்ற மாணவர்களுக்கு முற்போக்கான கருத்துகளை ஊட்டவும், அவர்களது பெற்றோர்களான யாழ். தமிழ் சமூகத்துடன் உறவு கொள்ளவும், கல்வித்துறையின் ஏனைய சகாக்களுடன் உறவு பூணவும் அத்தொழில் பெரும் வாய்ப்பைத் திறந்துவிட்டது.

அவர் யாழ். இந்துக் கல்லூரியில் சுமார் 30 வருடங்கள் ஆசிரியராகவும், பின்னர் சிறிது காலம் பதில் அதிபராகவும் கடமையாற்றினார். அதன் பின்னர் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி, பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரி என்பனவற்றின் அதிபராக இருந்து ஓய்வு பெற்றார்.

தோழர் கார்த்திகேசன் அவர்கள் யாழ்ப்பாணத்துக்கு கொழும்பிலிருந்து தனியொரு கம்யூனிஸ்ட்டாகச் சென்றாலும், ஏற்கெனவே மார்க்சியக் கருத்துக்களால் ஆகர்சிக்கப்பட்டிருந்த சிலரை இனங்கண்டு, அவர்களையும் இணைத்துக் கொண்டு கட்சி அமைப்புப் பணிகளை முன்னெடுக்க ஆரம்பித்தார். அவர்களில் ஆரம்ப காலத்தில் அவருடன் கட்சிப் பணிகளில் இணைந்து கொண்டவர்களில் தோழர்கள் இராமசாமி ஐயர், எம்.சி. சுப்பிரமணியம், டாக்டர். சு.வே. சீனிவாசகம், மகாலிங்கம் மாஸ்டர், ஆர்.ஆர். பூபாலசிங்கம், எஸ்.கே. கந்தையா, வீ.ஏ. கந்தசாமி, அரசடி இராசையா ஆகியோர் முக்கியமானவர்களாவர். பிற்காலத்தில் அ.வைத்திலிங்கம், ஐ.ஆர். அரியரத்தினம், பொன். கந்தையா, காதர் போன்ற பலர் கார்த்திகேசனுடன் இணைந்து கட்சிப் பணிகளை முன்னெடுத்தனர்.

கம்யூனிஸ்ட் கட்சி ஏழை எளிய மக்களுக்காக முன்வைத்த விமோசன வேலைத் திட்டங்கள் மட்டுமன்றி, முழுத் தமிழ் மக்களுக்காகவும் முன்வைத்த, 'வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கு பிரதேச சுயாட்சி' என்ற யதார்த்தபூர்வமான தீர்வு, 1956ல் பண்டாரநாயக்க அரசாங்கம் கொண்டு வந்த சிங்களம் மட்டும் சட்டத்தை பாராளுமன்றத்திலும், வெளியிலும் உறுதியாக எதிர்த்து நின்ற நிலைப்பாடு என்பனவும், தமிழ் மக்கள் மத்தியில் கட்சிக்கு பெரும் செல்வாக்கை பெற்றுத் தந்தன. கட்சி எடுத்த இந்த ஆக்கபூர்வமான, காலத்தால் அழியாத தீர்மானங்களில் கார்த்திகேசனின் பங்களிப்பு, மிகவும் உயர்வானதும், தீர்க்கமானதுமாகும். அதன் பிரதிபலிப்பு வட பகுதியில் நடைபெற்ற தேர்தல்களிலும் எதிரொலித்தது.

1956 பொதுத் தேர்தலில் கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் பருத்தித்துறை தொகுதியில் போட்டியிட்ட தோழர் பொன். கந்தையா அமோக வெற்றி பெற்று பாராளுமன்ற உறுப்பினரானார். வட்டுக் கோட்டை தொகுதியில் போட்டியிட்ட தோழர் அ. வைத்திலிங்கம், அத்தொகுதியில் வெற்றி பெற்ற தமிழரசுக் கட்சி வேட்பாளர் அ. அமிர்தலிங்கத்திடம் மிகக் குறைந்த வாக்கு வித்தியாசத்திலேயே தோல்வியுற்றார். அதேபோல கட்சி சார்பில் யாழ்ப்பாணத் தொகுதியில் போட்டியிட்ட தோழர் கார்த்திகேசன் கணிசமான வாக்குகள் பெற்று கட்டுப் பணத்தைப் பெற்றார். அங்கு சமசமாஜகட்சி தனது வேட்பாளரை போட்டிக்கு நிறுத்தாது விட்டிருந்தால், சில வேளைகளில் காத்திகேசன் யாழ்ப்பாணத் தொகுதி பாராளுமன்ற உறுப்பினராகத் தெரிவாகியிருக்கலாம் என்பதை, வேட்பாளர்களுக்கு போடப்பட்ட வாக்குகள் காட்டி நின்றன.

இருந்த போதிலும், யாழ்ப்பாண மாநகர சபைத் தேர்தலில் வண்ணார்பண்ணை வட்டாரத்தில் கட்சி சார்பாகப் போட்டியிட்ட கார்த்திகேசன், அங்கு போட்டியிட்ட மிகவும் செல்வாக்கு மிக்க, பிற்காலத்தில் மாநகர சபை முதல்வராக வந்த, தமிழ் காங்கிரசின் வேட்பாளரான துரைராசாவைத் தோற்கடித்து வெற்றிவாகை சூடியமை, அந்தக் காலத்தில் கட்சியின் செல்வாக்கை நன்கு புலப்படுத்துகிறது. அதுமாத்திரமல்ல, அவர் மாநகர சபை உறுப்பினராக இருந்த காலத்தில் தான், அவர் ஒருவர் தன்னந்தனியனாக நின்று, தமிழரசு - காங்கிரஸ் கட்சிகளுக்கிடையிலான முரண்பாட்டைப் பயன்படுத்தி, யாழ்ப்பாணத்தின் சனத்தொகையில் மிகச் சிறு தொகையினரான முஸ்லிம்களின் பிரதிநிதியாகத் தெரிவான சுல்தான் என்பவரை யாழ். மாநகர சபையின் முதல்வராக்கினார் என்பதும் குறிப்பிடத் தக்கது. அவரது அந்தப் பங்களிப்பை முஸ்லிம் மக்கள் இன்றுவரை நன்றியுடன் நினைவு கூர்ந்து வருகின்றனர்.

இவ்வாறு கார்த்திகேசனின் வாழ்வையும் பணியையும் கூறுவதானால், அது அவரதும் தமிழ் மக்களினதும், இலங்கை இடதுசாரி இயக்கத்தினதும் பெரும் வரலாற்று நூலாகி விடும்.

இன்று நாம் கடந்து வந்த பாதையைத் திரும்பிப் பார்க்கையில், இடதுசாரி இயக்கங்கள் விட்ட தவறுகளாலும், தமிழ் - சிங்கள தேசிய வெறிப் போக்குகள் விளைவித்த நாசத்தாலும், சர்வதேச கம்யூனிஸ்ட் இயக்கத்தில் ஏற்பட்ட பிளவுகள் பலவீனங்களாலும், பொதுவாக இலங்கையிலும், குறிப்பாக தமிழ் பேசும் மக்கள் மத்தியிலும், இடதுசாரி இயக்கம் மிகவும் பலவீனமான ஒரு நிலையில் இருப்பதையே காண முடிகிறது. ஆனால் இது நிரந்தரமானதல்ல.

தோழர் கார்த்திகேசன் அவர்கள் அமரத்துவமடைந்த 42வது வருடத்தை நினைவு கூருகின்ற இவ்வேளையில், வெல்லப்பட முடியாத மார்க்சிசம் - லெனினிசம் என்ற ஆயுதத்தைக் கொண்டு, மீண்டும் இலங்கையில் ஒரு சக்தி வாய்ந்த கம்யூனிஸ்ட் இயக்கத்தை கட்டியெழுப்புவதே, அவருக்கு நாம் செய்யும் உண்மையான அஞ்சலியாக அமையும்.

**நன்றி: தினகரன் (02.09.2010)**

■ ■ ■

# எங்கள் தோழன் கார்த்தி

**நீர்வை பொன்னையன்: நீண்டகால கம்யூனிஸ்ட் கட்சித் தோழரும், தொழிற்சங்கவாதியும், முற்போக்கு எழுத்தாளரும் ஆவார்.**

- நீர்வை பொன்னையன் -

*"மனிதரது மதிக்க முடியாத இனிய உடமைகளில் சிறந்தது அவரது வாழ் வாகும். அவர் ஒரு தடவைதான் வாழ முடியும். காலமெல்லாம் குறிக்கோளில் லாமல் பாழாக்கிவிட்டேனென்ற வருத் தம் வதைப்பதற்கு இடம் கொடுக்காத வகையில் அவர் சீராக வாழவேண்டும். அற்பனாக வாழ்ந்து இழிவு தேடினேன் என்ற அவமானம் உள்ளத்தை எரிப்ப தற்கு இடமில்லாத வகையில் நேராக வாழவேண்டும். உலகத்தின் தலைசி றந்த லட்சியத்துக்காக, மனிதகுலத்தின் விடுதலைப் போராட்டம் என்ற பொன் னான மார்க்கத்துக்காக என் வாழ்வு முழுவதையும், சக்தி அனைத்தையும் அர்ப்பணித்தேன் என்று இறக்கும் பொழுது கூறும் உரிமைபெறும் வகை யில் வாழவேண்டும். திடீர் நோயோ, சோக விபத்தோ வாழ்வுக்கு வெடிவைக் கக் கூடுமாதலால், மனிதர் தன் வாழ் வின் ஒவ்வொரு வினாடியையும் நன்கு பயன்படுத்திக்கொள்ள வேண்டும்"*


நிக்கொலாய் ஒஸ்ரோவஸ்க்கிய் என்ற சோவியத் எழுத்தாளன் 'வீரம் விளைந் தது' என்ற தன் நவீனத்தில் மேற்கண்ட வாறு கூறியுள்ளான்.

எங்கள் தோழன் கார்த்திகேசன் அவர்க ளும் தன் வாழ்வு முழுவதையும் தனது இறுதி மூச்சுவரை 'மனித குலத்தின் விடு தலைக்கான போராட்டம்' என்ற பொன் னான லட்சியத்துக்காக அர்ப்பணித்துள் ளார். தோழர் கார்த்தி இலங்கைக் கம் யூனிஸ்ட் கட்சியின் ஸ்தாபகர்களில் ஒரு வர். அது மாத்திரமல்ல அவர் இலங் கையின் வடபுலத்தில் இடதுசாரி இயக் கத்தைப் பரப்பிய முன்னோடிகளில் முதன் மையானவர். அவர் ஓர் ஆழமான கல் விச் சிந்தனையாளர். தலைசிறந்த ஆசிரி யன், அர்ப்பணிப்புள்ள சமூகத்தொண்டன், மனித நேயப் பண்பாளர், எளிமையான தூய வாழ்வைக் கடைப்பிடித்தவர். எல் லாவற்றிற்கும் மேலாக, அவர் ஓர் உன் னத மார்க்ஸிசவாதி. அற்புதமான கம்யூ னிஸ்ட் செயற்பாட்டாளன்.

மலேசியாவில் பிறந்து, வளர்ந்து, கல்வி கற்று, உயர் கல்வியை மேற்கொள்வதற் காக இலங்கை வந்தார் மு. கார்த்திகே சன். இலங்கைப் பல்கலைக்கழகக் கல் லூரியில் மாணவனாக இருந்த காலத்தி- லேயே தான் விரும்பி ஏற்றுக்கொண்ட இலட்சிய பயணமான மார்க்ஸிசப் பாதையில் காலடியெடுத்து வைத்தார். அன்று ஆரம்பித்த அவரது மகத்தான நீண்ட பயணத்தில் எண்ணற்ற இன்னல்க ளும் இடையூறுகளும் நேரிட்ட போதிலும், அவர் உறுதி தளராது, பரித்தியாக உணர் வுடனும், உளத்தூய்மையுடனும் விடாப்பி டியாகச் செயலாற்றி முன்னேறிச் சென் றுள்ளார்.

கொழும்பிலமைந்திருந்த இலங்கைப் பல்கலைக்கழகக் கல்லூரியில், ஏகாதி பத்திய - பாசிஸ எதிர்ப்பு மாணவர் அமைப்பு ஒன்றை உருவாக்கிச் செயல் பட்டவர்களில் முன்னணியில் நின்றார் கார்த்திகேசன். அந்த மாணவர் அமைப் பின் குரலான 'மாணவர் செய்தி' (Student News) என்ற ஒரு பத்திரிகையை ஆரம் பித்து அதன் ஆசிரியராகவும் பணியாற் றினார். இலங்கைப் பல்கலைக்கழகக் கல்லூரியில் ஆங்கிலம், கணிதம் முதலிய பாடங்களைக் கற்றார். ஆங்கிலத்தில் சிறப்புப் பட்டதாரியாக வெளியேறிய கார்த்திகேசன் அன்று இலங்கை அர சாங்க நிர்வாக சேவையில் சேர்ந்திருந் தாரானால் அவர் தனக்கு ஒரு வளமான சொகுசு வாழ்க்கையை இலகுவில் அமைத் திருக்க முடியும். பதிலாக மக்களுக்குச் சேவை செய்யவேண்டும் என்ற லட்சிய வேட்கையுடன் கம்யூனிஸ்ட் இயக்கத்தில் தம்மை இணைத்துக் கொண்டார்.

இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சி ஸ்தாபக முன்னோடிகளில் ஒரு முக்கிய உறுப்பி- னராகத் தோழர் கார்த்திகேசன் தமது கட்சி வேலையை ஆரம்பித்தார். அவர் கட்சியின் முழுநேர ஊழியராக இணைந்து விசுவாசத்துடன் சேவையாற்றினார். கம்யூ னிஸ்ட் கட்சியின் ஸ்தாபக முழுநேர ஊழியர்களான தோழர்கள் ஆரியவன்ச குணசேகர, ஐசோதிஸ், ஹரி அபேகுண வர்த்தன, பி. கந்தையா, கே. இராமநா தன், பிரேம்லால் குமாரசிறி, என். சண்மு கதாசன், ஏச்.ஜி.எஸ். ரத்னவீர, மு. கார்த் திகேசன், அ. வைத்திலிங்கம், பீற்றர் கெனமன் ஆகியோர் தோழர் டாக்டர் எஸ்.ஏ. விக்கிரமசிங்ஹா தலைமையை ஏற்று இயங்கினர். இக்காலகட்டத்தில் சேவையாற்றிய கம்யூனிஸ்ட் கட்சி முழு நேர ஊழியர்கள் அனைவரும் லட்சிய வேட்கையுடன் பரித்தியாக உணர்வுடன் பொருளை கொட்டா றோட் கம்யூனிஸ்ட் கட்சிக் காரியாலயத்தில் 'கம்யூன்' வாழ்க் கையை மேற்கொண்டனர். இத்தோழர்கள் ஒவ்வொருவரும் தத்தமக்குக்கிடைத்த சொற்ப ஊதியத்தைப் பொதுமையாக ஒன்று சேர்த்து தங்கள் கம்யூன் வாழ்க் கையை மேற்கொண்டனர். இது ஒரு லட் சிய 'கம்யூன்' வாழ்க்கை முறையாகும். தோழர் கார்த்திகேசன் கொழும்பிலிருந்த காலத்தில் கம்யூனிஸ்ட் கட்சியின் ஆங்கில வார ஏடான 'போவர்ட்' (Forward) பத்தி ரிகையின் ஆசிரியராகப் பணியாற்றினார். கம்யூனிஸ்ட் கட்சி தோழர் கார்த்தியை இலங்கையின் வடபுலத்தில் கட்சியை ஸ்தாபிக்கும் பணியை மேற்கொள்ளுமாறு பணித்தது. அவர் முழுமனதுடன் கட்சியை யாழ் பிரதேசத்தில் ஸ்தாபிப்பதற்குச் சென்றார்.



யாழ். மண்ணில் கம்யூனிஸ்ட் இயக்கத்தை ஸ்தாபித்து மார்க்ஸிச கொள்கையைப் பரப்பியவர்களில் தோழர் கார்த்திகேசன் முதன்மையானவர். கம்யூனிஸ்ட் கட்சியின் முழுநேர ஊழியராகக் கடமையாற்றிய தோழர் கார்த்தி, தனது குடும்ப வாழ்க் கையை மேற்கொள்வதில் பொருளாதார நெருக்கடிக்கு முகம் கொடுக்க நேரிட் டது. இதன் காரணமாக அவர் யாழ் இந்துக்கல்லூரியில் ஆசிரியராகக் கட மையாற்றும் பொறுப்பை ஏற்றுக்கொள் ளும் நிலைக்கு நிர்ப்பந்திக்கப்பட்டார். யாழ் சமூகத்தின் மிகக் கொடுமையான பழைமைவாத, வைதீக இந்துக்கள் செறிந்து வாழ்கின்ற வண்ணார்பண்ணை யில் யாழ் இந்துக் கல்லூரி அமைந்தி ருந்தது. இப்படிப்பட்ட ஒரு சமூகப் பின் னணியைக் கொண்ட கல்லூரியில் ஒரு மார்க்ஸிசவாதி சேவையாற்றுவது ஒரு பெரும் சவாலாக இருந்தது. தோழர் கார்த்தி மன உறுதியுடன் இந்தச் சவாலை ஏற்றுப் பணியாற்ற முன்வந்தார். அவர் இக்கல்லூரியில் தமது அந்தரங்கசுத்தி யான சேவையினால் நற்பிரஜைகளாக பெரும் எண்ணிக்கையினரை உருவாக்கி யுள்ளதுடன், பெரும் தொகையான முற் போக்குச் சிந்தனை கொண்டவர்களையும் உருவாக்கினார். இக்கால கட்டத்தில் தமது அர்ப்பணிப்பான சேவை மூலம் தோழர் கார்த்தி மாணவர் சமூகத்தின் அமோக ஆதரவைப் பெற்றார். அவரைச் சுற்றி ஒரு பெரும் முற்போக்கு மாணவர் படையணி உருவாகியது. அது மாத்திர மல்ல தனது புனிதமான ஆசிரியத் தொண் டின் மூலமும், பரித்தியாக உணர்வுடைய சமூகத் தொண்டின் மூலமும் தோழர் கார்த்திகேசனின் மார்க்ஸிசக் கொள் கையை ஏற்றுக்கொள்ளாத யாழ் சமூக பழைமைவாத வைதீக இந்துக்களின் கணிசமான தொகையினரது மதிப்பையும், ஆதரவையும் அவரால் பெற்றுக்கொள்ள முடிந்தது. இதன் காரணத்தாலே தான் அவர் அன்றைய காலகட்டத்தில் யாழ் மாநகரசபைத் தேர்தலில், மிகவும் பணபலம் வாய்ந்த அப்பிரதேசவாசியான ஒரு பெரும்புள்ளியைத் தோற்கடித்து மாநகரசபை உறுப்பினராகத் தேர்ந்தெ டுக்கப்பட்டு, யாழ் மாநகரசபை மக்கள் அனைவருக்கும் சேவை செய்யும் வாய்ப் புக் கிட்டியது.

கல்வி ஒரு தேசத்தின் வளத்திற்கும் மேம்பாட்டுக்கும் அத்தியாவசியமானது. ஆனால் அத்தேசத்திலுள்ள சகல தரப் பினருக்கும் கிடைக்கக் கூடியதாக அக் கல்வி முறை அமைந்திருக்க வேண்டும். முதலாளித்துவ நாடுகளிலுள்ள கல்வி முறை, அந்நாடுகளிலுள்ள சமூகத்தின் ஒரு சிறுபிரிவினருக்கு மட்டும்தான், அதா வது சுரண்டும் வர்க்கத்தைச் சார்ந்த பிள்ளைகளுக்கு மாத்திரம்தான் கல்வி கிடைக்கக்கூடிய வகையில் அமைந்துள் ளது. அது மாத்திரமல்ல இந்த நாடுகளி லுள்ள கல்விக்கும் நாட்டின் பொருளா தார உற்பத்திக்கும் எதுவித தொடர்புமற்ற கல்விமுறை அமைந்துள்ளது. இக்கல்வி முறை அகற்றப்பட்டு, சமூகத்தின் சகல ருக்கும் கல்வி கிடைக்கக் கூடியதாகவும், நாட்டின் உற்பத்தித் துறைக்கும் நெருங் கிய தொடர்புள்ள சோஷலிசக் கல்வி முறை அமைந்திருக்க வேண்டும் என்ற கல்விச்சிந்தனையை உடையவராக இருந் தார் தோழர் கார்த்தி. இதற்காகத்தான் அவர் தமது வாழ்நாளில் போராடினார்.

ஆசிரியரும், டாக்டரும் தான் ஒரு சமூ கத்தின் இருவிழிகள். ஒரு சமூகத்தை ஆரோக்கியமுள்ளதாக உருவாக்குவதற்கு ஆசிரியரும் டாக்டரும் தியாக உணர்வு டன் பணியாற்ற வேண்டும் என்று தோழர் கார்த்தி அடிக்கடி வலியுறுத்தி வந்துள் ளார். ஒரு சமூகத்தை விழிப்படையச் செய்து அதை மேம்படுத்துவதற்கு ஆசி ரியனுடைய பங்கு அத்தியாவசியம். அன்று யாழ் சமூகத்தின் விழிப்புக்கும் மேம்பாட்டுக்குமாக பணியாற்றிய ஆசிரி யப் பெருந்தகைகள் பலர் இருந்துள்ள னர். இவர்களில் பலர் சுதந்திரம், ஜனநா யகம், மனிதநேயம், சமத்துவம் பற்றிய சிந்தனைகளை வலியுறுத்தி யாழ் மண் ணில் விதைத்துப் பரப்புவதில் முழுமூச் சாக ஈடுபட்டனர். இவர்களில், ஸ்கந்தவ- ரோதயா கல்லூரி அதிபர் ஒறேற்றர் சுப் பிரமணியம், கொக்குவில் இந்துக்கல்லூரி அதிபர் ஹன்டி பேரின்நாயகம், பரமேஸ் வராக் கல்லூரி அதிபர் சிவ பாதசுந்த ரம், யாழ். இந்துக்கல்லூரி ஆசிரியர்களான அ. வைத்திலிங்கம், மு. கார்த்திகேசன் போன்றோர் குறிப்பிடத்தக்கவர்கள். இவர் கள் அனைவரும் மார்க்ஸிசவாதிகளாக வும். இடதுசாரிகளாகவும் இருந்தனர். இவ்வாசிரியப் பெருந்தகைகள் தமது அர்ப்பணிப்பான சேவை மூலம் யாழ் சமூகத்தின் பெருமதிப்பைப் பெற்றதுடன் இவர்கள் உத்தம ஆசிரியர்களுக்கான உதாரண புருஷர்களாக இன்றுவரை திகழ்கின்றனர்.

தோழர் கார்த்திகேசன் வடபுலத்திற்குச் சென்றபொழுது, யாழ் சமூகத்தின் எந்தப் பகுதி மக்களுக்கு, அதாவது சமூகத்தின் எந்த மட்டத்திலுள்ள மக்களுக்கு தமது சேவை அத்தியாவசியமாகத் தேவைப் டுகின்றது என்பதைச் சரியாக இனம் கண்டு, அப்பகுதி மக்களிடையே அவர் தமது அரசியல் வேலையை ஆரம்பித்தார். யாழ் சமூகத்தில் சாதியின் பெயரால் அடக்கி ஒடுக்கப்பட்டு, சுரண்டிச் சூறை யாடப்பட்டுக் கொண்டிருந்த சமூகத்தினர், நிலமற்ற விவசாயிகள், தொழிலாளர்கள் ஆகியோர் மத்தியில் தமது அரசியல் வேலையை தோழர் கார்த்தி ஆரம்பித் தார். அவர் தம்மைப் போல அன்று இத யசுத்தியுடன் சேவையாற்ற முன்வந்த

தொடர்தல் 93ம் பக்கம்

# எங்கள் தோழன்...

92ம் பக்கத் தொடர்ச்சி...


தோழர்கள் அ. வைத்திலிங்கம், ஐ.ஆர். அரியரத்தினம், எம்.சி. சுப்பிரமணியம், இராமசாமி ஐயர், வி.ஏ. கந்தசாமி, டாக்டர் சீனிவாசகம், ஆர்.ஆர். பூபாலசிங்கம், எஸ். மகாலிங்கம், கே. ஜனகா ஆகியோருடன் இணைந்து வேலை செய்தார். இவர்களுடன் தோழர்கள் சுபைர் இளங்கீரன், கே. டானியல், டொமினிக் ஜீவா, அரசடி இராசையா, எஸ். பொன்னுத்துரை ஆகியோரும் நானும் பின் இணைந்து கொண்டோம்.

யாழ் குடாநாட்டில் கம்யூனிஸ்ட் கட்சி நிறுவனமயமாக்கப்படுவதற்கு முன்னர் யாழ் ஆஸ்பத்திரிக்குப் பின்னாலுள்ள விக்ரோரியா றோட்டிலமைந்திருந்த, தோழர் கார்த்தியினால் வாடகைக்கு அமர்த்தப்பட்ட அவருடைய வீட்டில்தான் கட்சி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. அநேகமாக ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமை காலையிலும் கட்சியின் அரசியல் வகுப்புக்கள் அல்லது கூட்டங்கள் நடத்தப்படும். 1947ம் ஆண்டின் பிற்பகுதியில் ஒரு ஞாயிற்றுக் கிழமை காலையில் நடந்த அரசியல் வகுப்பில் நான் பங்குபற்றினேன். அந்த வகுப்பை எடுத்தவர்தான் தோழர் கார்த்திகேசன் என்பதை வகுப்பு முடிந்த பின்னர் அறிந்தேன். 'மனித சமுதாய வளர்ச்சியின் வரலாற்றை' மிக இலகுவான முறையில் தெளிவாக எடுத்துக் கூறினார் தோழர் கார்த்திகேசன். விடயம் மிகவும் கடினமானதாக இருந்தாலும் அதை மிகவும் எளிமையாகவும் நாம் புரிந்துகொள்ளக்கூடிய வகையிலும் சுவாரசியமான முறையிலும் எடுத்துக் கூறினார் தோழர் கார்த்தி. கொழும்பிலிருந்து கட்சித் தலைவர்கள் வருகின்ற பொழுதெல்லாம் கார்த்தியின் வீட்டிலேதான் தங்குவார்கள்.

பின்னர் கட்சிக் காரியாலயம் வின்சர் படமாளிகைச் சந்திக்கு சமீபமாக உள்ள ஸ்ரான்லி வீதியிலமைந்த மஸ்கன் கட்டடத்திற்குப் பக்கத்திலுள்ள இரண்டு மாடிக் கட்டடத்தின் மேல்மாடியில் இயங்கியது. இதன் பின்னர் ஸ்ரான்லி வீதியிலுள்ள 'கனகபவனம்' மேல்மாடியில் இயங்கியது. கட்சி 1963ல் பிளவுபட்ட பின்னர் ஸ்ரான்லி வீதியிலுள்ள 'மொம்ஸாக் பில்டிங்' என்று அழைக்கப்பட்ட கட்டடத்தின் மேல் மாடியில் கட்சி அலுவலகம் இயங்கியது. இதன் பின்னர் யாழ் வீதியிலமைந்த ஒரு வீட்டிலும், பின்னர் ஆஸ்பத்திரிச் சந்திக்கு அருகாமையிலமைந்த இன்சூரன்ஸ் கூட்டுத்தாபனத்திற்கு முன்னாலிருந்த கட்டடத்திலும், இதையடுத்து ஸ்ரான்லி வீதி பெற்றோலியக் கூட்டுத் தாபனத்துக்கு முன்னாலிருந்த யாழ் புத்தகநிலையைக் கட்டடத்திலும் கட்சி அலுவலகம் இயங்கியது. கட்சிக் காரியாலயம் வாடகைக் கட்டடங்களில் இயங்கியதைப் போல தோழர் கார்த்திகேசனின் குடும்பமும் விக்ரோரியா றோட், கலட்டி அம்மன் கோவிலடி, நார்ச்சிமார் கோவிலடி, சிவப்பிரகாசம் வீதி, மறுபடி கலட்டிப் பிள்ளையார் கோவிலடி, நார்ச்சிமார் கோவில் முன்னமைந்த இராமநாதன் வீதி ஆகிய வண்ணார்பண்ணையில் அமைந்த வாடகை வீடுகளில்தான் வாழ்ந்து வந்தது.

கம்யூனிஸ்ட் கட்சியை ஸ்தாபித்து அதைக் கட்டி எழுப்பும் வேலையில் முழுமூச்சுடன் ஈடுபட்ட தோழர் கார்த்தி, அதேவேளை தான் ஒரு கம்யூனிஸ்ட்டாக வாழ்ந்து முன்னுதாரணமாகக் திகழ்ந்தார். அவர் விசால உள்ளம் படைத்தவராக இருந்ததுடன், வற்றாத அன்புள்ளம் கொண்டவர். நேர்மையான தூய எளிமையான வாழ்வை கடைப்பிடித்தவர். கட்சியினதும், கட்சி உறுப்பினர்களதும் நலனைத் தனது சொந்த நலனாகக் கருதி செயலாற்றியவர். தான் வரித்துக்கொண்ட தத்துவத்தையும் தமது வாழ்வையும் இணைத்து செயற்பட்டவர். அவர் சரியான கோட்பாட்டை உறுதியாகக் கடைப்பிடித்து வந்ததுடன், தவறான கருத்துக்களுக்கும் செயல்பாடுகளுக்கும் எதிராக உறுதியாக விடாப்பிடியாகக் போராடியவர். கட்சிக்குள் காலத்துக்காலம் தலை தூக்கிய அதிதீவிர இடதுசாரிப் போக்கிற்கும், வலதுசாரிச் சந்தர்ப்பவாதப் போக்கிற்கும் எதிராக தத்துவார்த்த ரீதியாக உறுதியாகவும் விடாப்பிடியாகவும் போராடிக் கட்சியைச் சரியான வழியில் செல்ல நெறிப்படுத்தியவர் கட்சி உறுப்பினர்களையும் கட்சி ஊழியர்களையும் தட்டிக்கொடுத்து வளர்த்தெடுப்பதில் கரிசனையுடன் செயற்பட்டார்.

ஆரம்பத்திலிருந்து இறுதிவரை தூய்மையான எளிமையான ஒரு கம்யூனிஸ்ட்டிற்குரிய சீரிய வாழ்க்கையைக் கடைப்பிடித்



- நீர்வைபொன்னையன்

தவர் தோழர் கார்த்தி. இந்தியாவின் பிரதமராக இருந்த லட்சிய புருஷர் லால்பகதூர் சாஸ்திரி அவர்கள் வாழ்ந்த காலத்திலும் அவர் இறந்த பின்னரும் அவரது குடும்பம் வறுமை நிலையிலேயே இருந்தது. சாஸ்திரிக்கு எதுவித வங்கிக் கணக்கோ பெரும் சொத்தோ இருந்ததில்லை. தமிழ் நாட்டின் கர்மவீரர் காமராஜர் மறைந்தபின் அவரது தாயார் வாடகை வீட்டிலேதான் வாழ்ந்தார். மேற்கு வங்க முன்னாள் முதல்வர் தோழர் ஜோதி பாசு தேசிய உடையில் எளிமையான வாழ்க்கையை நடத்தினார். அவர் அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட மெய்ப்பாதுகாவலர்கள் எவருமின்றி சுயாதீனமாக வாழ்ந்தவர். கேரளாவின் முதல்வராக இருந்த தோழர் நம்பதிரிபாட் தமது இறுதிக்காலத்தில் தாம் எழுதிய நூல்கள் மூலம் கிடைத்த றோயல்ரி (உரிமைக் கட்டணம்) மூலம்தான் தாம் வசித்த வீட்டு வாடகைப் பணத்தைக் கட்டிவந்தார். வியட்நாம் மக்களின் மகத்தான தலைவர் ஹோசிமின் அவர்கள் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்ட பொழுது, அந்த வைபவத்திற்குச் செல்வதற்கு உடுப்பு இல்லாமல் தனது சகாவின் உடுப்பை இரவலாக வாங்கி உடுத்துச் சென்றார். அவர் இறக்கும் வரை மூன்றே மூன்று உடைகளை மாத்திரமே தனக்குச் சொந்தமாக வைத்திருந்தார். அவருக்கு எதுவித சொத்தோ செல்வமோ என்று மிருந்ததில்லை. அவரது வற்றாத செல்வம் வியட்நாமிய மக்கள்தான். இவ்வாறான லட்சிய புருஷர்களைப் போல தோழர் கார்த்தியும் தூய்மையான வாழ்வைக் கடைப்பிடித்தவர். அவர் எதுவித சொத்தையும் சேகரித்தவருமல்ல, வைத்திருந்தவருமல்ல. வறுமையிற் செம்மை கண்டவர். அவரது வெற்றிக்கு உறுதுணையாக நின்றவர் தோழர் கார்த்தியின் மனைவி. இருபதாம் நூற்றாண்டின் தத்துவ மேதை கார்ல் மார்க்ஸ் அவர்களது சாதனைகளுக்கும் வெற்றிக்கும் உறுதுணையாக இருந்தவர் அவரது மனைவி ஜென்னி. மகத்தான தலைவர் லெனின் அவர்களது புரட்சி நடவடிக்கைகளுக்கும் வெற்றிக்கும் உறுதுணையாகவும் பக்க பலமாகவும் இருந்தவர் அவரது வாழ்க்கைத் துணைவி குரூப்ஸ்கயா. அதேபோல தோழர் கார்த்தியின் உன்னத வாழ்விற்கு உறுதுணையாகவும் பங்காளியாகவும் இறுதிவரை இருந்தவர் அவரது வாழ்க்கைத் துணைவியார் வாலாம்பிகை என்பது யாவரும் அறிந்த உண்மை.

தனது சொந்த நலனிலும் பார்க்க, தன் குடும்ப நலனிலும் பார்க்க கம்யூனிஸ்ட் கட்சியின் நலனே பெரிதெனக் கொண்டு அதற்காக இரவும் பகலும் இடையறாது உழைத்தவர் தோழர் கார்த்தி. கட்சியை வடபுலத்தில் ஸ்தாபித்தவர்களில் முதன்மையானவர். அதைக் கட்டி வளரப்பதிலும் தோழர் கார்த்தி முனைப்பாகச் செயல்பட்டார். கட்சிக் கிளைகளை யாழ் நகரத்தின் பல பகுதிகளில் குறிப்பாக, ஒடுக்கப்பட்ட மக்கள் வாழ்கின்ற பகுதிகளில் ஸ்தாபித்தார். அத்துடன் யாழ் குடா நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் கட்சிக்கிளைகளை நிறுவுவதில் முனைந்து அதில் குறிப்பிடத்தக்கதான வெற்றியையும் நிலைநாட்டினார். யாழ் நகரின் கொட்டடி, ஆரியகுளம், வண்ணார்பண்ணை, பலாலி வீதி, அரியாலை, குருநகர், முஸ்லிம் வட்டாரம், நல்லூர் போன்ற இடங்களிலும் குடாநாட்டின் முக்கிய இடங்களான காங்கேசன்துறை, பருத்தித்துறை, உடுப்பிட்டி, நெல்லியடி, கரவெட்டி, மட்டுவில், சங்கானை, சுன்னாகம், கோப்பாய் போன்ற இடங்களிலும் கட்சிக் கிளைகளை அமைப்பதில் கரிசனையுடன் முயற்சித்து இம்முயற்சியில் கம்யூனிஸ்ட் கட்சி பெருமைப்படக்கூடியதான அளவில் வெற்றி காண வழிவகை செய்தார். இப்பிரதேசங்களில் தோழர் கார்த்தியின் உதவியுடன் கிரமமாக குறிப்பிட்ட கால கட்டத்திற்கு அரசியல் வகுப்புக்கள் நடத்தப்பட்டன. இப்பகுதிகளில் கட்சிப் பத்திரிகைகளும் கிரமமாக குறிப்பிட்ட காலத்திற்கு விற்பனையாகின. இப்பிரதேசங்களிலுள்ள கட்சி உறுப்பினர்களை அரசியற் தத்துவார்த்த ரீதியில் வளர்த்தெடுப்பதில் கார்த்தி அக்கறையுடன் செயற்பட்டார். கட்சி உறுப்பினர்களுடன் இதயபூர்வமாக தோழமையுடன் பழகியதன் மூலம் அவர்களது பேரன்பையும் பெரு மதிப்பையும் தோழர் கார்த்தி பெற்றார். கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர் அனைவரும் 'எங்கள் தோழர் கார்த்தி' என்று உரிமையுடனும் வாஞ்சையுடனும் அழைத்து வந்துள்ளனர்.

கட்சிப் பணிகளை உறுப்பினர்கள் செய்யும் பொழுது கட்சியின் தலைவர்களான தோழர்கள் கார்த்தி, எம்.சி. சுப்ரமணியம், இராமசாமி ஐயர் ஆகியோர் இணைந்து உற்சாகத்துடன் வேலை செய்வார்கள். கட்சிக்கு நிதி சேகரிப்பதிலும் கட்சிப் பத்திரிகையை யாழ். பஸ் நிலையத்திலும் கடைத் தெருவிலும் விற்பதிலும் கட்சி உறுப்பினர்களுடன் இம் மூவரும் சேர்ந்து இயங்குவார்கள். கட்சிப் பிரசாரக் கூட்டங்களையும் மேதினக் கூட்டங்களையும் ஏற்பாடு செய்வதிலும் ஏனைய தயாரிப்பு வேலைகளிலும் இம் மும்மூர்த்திகள் ஊக்கத்துடன் செயற்படுவர். இக் கூட்டங்களுக்கான போஸ்டர்களை ஒட்டுவதிலிருந்து கூட்டத்துக்கான மேடை அமைப்பது வரை இவர்கள் எம்முடன் சேர்ந்து வேலை செய்வார்கள். அதுமாத்திரமல்ல கூட்டம் முடியும்வரை இவர்கள் உறுப்பினர்களுடன் நின்று மேடையைக் கழற்றி அகற்றப்படும்வரையும் அனைவருடனும் சேர்ந்து உழைப்பார்கள். கட்சியின் கூட்டச் சுவரொட்டிகளை (போஸ்டர்கள்) இரவு வேளைகளில் நாங்கள் ஒட்டும்பொழுது பொலிசாரின் கெடுபிடிகளுக்கு முகம் கொடுக்க நேரிடும். இதைச் சமாளிப்பதற்கு இம்மூவரும் இரவு முழுவதும் யாழ்நகர வீதிகளில் எம்முடன் அலைந்து திரிவார்கள். முக்கிய இடங்களில் சுவரொட்டிகளை பொலிசாரோ, கட்சி விரோதிகளோ கிழித்து நாசமாக்காமலிருக்கும் வகையில் உயரமான இடங்களில் ஒட்ட வேண்டியநிலை ஏற்படும். 'தோழர்! என்னுடைய தோளில் ஏறிநின்று போஸ்டரை உயரத்தில் ஒட்டும்' என்று வாட்டசாட்டமான உடல்வாகைக் கொண்ட தோழர் இராமசாமி ஐயர் கட்டளையிடுவார். யாழ். சுண்டிக்குளி பிரதான வீதியிலமைந்துள்ள 'கொன்வென்ட்' சுவர் 'கம்யூனிஸ்ட் கட்சியின் டயறி' என்று அழைக்கப்பட்டது. 1953ம் ஆண்டின் ஹர்த்தால் காலத்திலிருந்து 70ம் ஆண்டு வரையான காலப்பகுதிவரை முதலாளித்துவ யூ.என்.பி. எதிரப்பு சுலோகங்கள் சிவப்பு மையினால் பெரிய எழுத்துக்களில் தொடர்ச்சியாக எழுதப்பட்டிருப்பதைக் காணக்கூடியதாக இருக்கும்.

யாழ் வின்சர் தியேட்டருக்கண்மையில் கட்சி அலுவலகம் இயங்கிய காலத்தில், கட்சிக் கூட்டங்கள் முடிந்த பின்னர் அல்லது கட்சிப் பத்திரிகை விற்பனைக்குப் பின்னர் தேனீர் குடிப்பதற்கு நாங்கள் யாழ். ஆஸ்பத்திரி வீதியிலமைந்துள்ள சிங்ககிரி பேக்கரிக்கு அருகாமையிலுள்ள ஒரு சிங்களவரின் கடைக்கு செல்வது வழக்கம். ஏன் இந்தக் குறிப்பிட்ட கடைக்கு மாத்திரம் நாங்கள் தேனீர் குடிக்க வருகின்றோம் என்று நான் ஒரு நாள் தோழர் கார்த்தியைக் கேட்டேன். "பிளேயின் ரீ, பொடி நடை, பீக்கொக் சிகறட், இவைதான் கம்யூனிஸ்டுகளாகிய எங்களுக்கு இங்கு கிடைக்கக்கூடியதாக இருக்கின்றன" என்று கார்த்தி நகைச் சுவையுடன் கூறியதுடன் இவற்றை நகரியுள்ள ஏனைய தமிழ்த் தேனீர்க் கடைகள் எங்களுக்கு தரமாட்டார்கள். இந்த ஒரே ஒரு சிங்களக் கடையில்தான் எங்கள் அனைவருக்கும் தேனீர் கிடைக்கும் என்று அர்த்தபுஷ்டியுடன் கூறினார். இத் தருணத்தில்தான் சாதி ஒடுக்குமுறையின் தாற்பரியத்தை என்னால் உணர்ந்து கொள்ள முடிந்தது. சாதி ஒடுக்குமுறைக் கெதிராக தோழர் கார்த்தியின் வழிகாட்டுதலுடன் போராடிவந்த கம்யூனிஸ்ட் கட்சியை அன்றைய தமிழ் மேட்டுக்குடியினர் 'நளக்கட்சி' என்று திமிர்த்தனத்துடன் கூறினர். கம்யூனிஸ்ட் கட்சியினதும் தோழர் கார்த்திகேசனதும் வழிகாட்டுதலுடன் சிறுபான்மைத் தமிழர் மகாசபை, தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கம் ஆகிய ஸ்தாபனங்கள் நிறுவப்பட்டு, சாதி ஒடுக்கு முறையைத் தகர்ப்பதற்காக சாத்வீகமான முறையிலும், ஆயுதம் தாங்கிய முறையிலும் பல போராட்டங்கள் யாழ் மண்ணில் நடத்தப்பட்டு குறிப்பிடத்தக்க வெற்றிச் சாதனைகள் நிலைநாட்டப்பட்டுள்ளன.

வடபிரதேசத்தில் கம்யூனிஸ்ட் கட்சியைக் கட்டியெழுப்புவதில் தோழர் கார்த்திகேசன் கரிசனை காட்டியதோடல்லாமல், கட்சியின் வெகுஜன அமைப்புக்களான தொழிற்சங்கம், விவசாயிகள் சங்கம், வாலிப சங்கம், சீன, சோவியத், வியட்நாமிய நட்புறவுச் சங்கங்கள், ஆசிரிய சங்கம் போன்றவற்றையும் கட்டி எழுப்புவதில் ஆர்வத்துடன் செயற்பட்டார். அறுபதாம் எழுபதாம் ஆண்டுகளில் நான் இலங்கைத் தொழிற்சங்க சம்மேளனத்தின் (C.T.U.F) வடபிராந்திய பிரதிநிதியாக செயற்பட்ட காலகட்டத்தில் தோழர்கள் கார்த்திகேசனும், வீ.ஏ. கந்தசாமியும் எனக்கு வழிகாட்டிகளாகவும் போராட்டத் தோழர்களாகவும் செயற்பட்டார்கள். இலங்கைப் போக்குவரத்துச்சபை (CTB) தொழிற்சங்கம், காங்கேசன் சீமெந்துத் தொழிற்சாலை தொழிலாளர் சங்கம், பரந்தன் இரசாயன தொழிற்சாலையின் தொழிலாளர் சங்கம், பீடித் தொழிலாளர் சங்கம், வல்லை நெசவாலை தொழிலாளர் சங்கம், ஆனையிறவு உப்பள தொழிலாளர் சங்கம், ஒட்டிசுட்டான் ஓட்டுத் தொழிற்சாலை தொழிலாளர் சங்கம், மில்க்வைற் சோப் தொழிலாளர் சங்கம், யாழ். நகர சாய்ப்புச் சிப்பந்திகள் சங்கம், வடபிரதேச சினிமா படமாளிகைத் தொழிலாளர் சங்கம் ஆகியவை இலங்கைத் தொழிற்சங்க சம்மேளனத்துடன் இணைந்திருந்தன. வடபிரதேசத்தில் இத் தொழிற்சங்கங்களை ஸ்தாபிப்பதிலும் வலுப்படுத்துவதிலும் நாம் பல நெருக்கடிகளுக்கும் பிரச்சினைகளுக்கும் முகம் கொடுக்க வேண்டியிருந்தது. இந்த இக்கட்டான வேளைகளில் தோழர் கார்த்தி எமக்கு அர்த்தபுஷ்டியான ஆலோசனைகளையும் வழிகாட்டுதலையும் நல்கி பெரும் உறுதுணையாகச் செயற்பட்டார்.

தொடர்தல் 94ம் பக்கம்

# எங்கள் தோழன்...

93ம் பக்கத் தொடர்ச்சி...

இத்தொழிற்துறைகளில் வேலை செய்கின்ற தொழிலாளர்களது உரிமைகளையும் கோரிக்கைகளையும் வென்றெடுப்பதற்கு நாம் மிகக் கடினமான நீண்டகாலப் போராட்டங்களை நடத்தவேண்டியிருந்தது. இந்த தொழிலாளர்களின் உரிமைகளுக்கான போராட்ட காலகட்டங்களின் போது இத்துறைகளைச் சார்ந்த நிர்வாகத்தினரதும், பொலிஸ் தரப்பினரதும் அச்சுறுத்தல்களுக்கும் அடக்குமுறைக்கும் தொழிலாளர்கள் முகம்கொடுக்க வேண்டிய இக்கட்டான சூழ்நிலைகளில் தோழர் கார்த்திகேசன் ஆக்கபூர்வமான ஆலோசனைகளையும் நெறிப்படுத்தல்களையும் வழங்கி இப்போராட்டங்கள் வெற்றியீட்டுவதற்கு பொரும்பங்காற்றியுள்ளார். இதன் விளைவாக இத்தொழிற்சங்கங்களின் தொழிலாளர்களில் பெரும்பான்மையினர் கம்யூனிஸ்ட் கட்சியின் மேதின ஊர்வலங்களிலும் கட்சியின் பல போராட்டங்களிலும் உணர்வுபூர்வமாகப் பங்குபற்றி வெற்றிவாகை சூட பங்களிப்புச் செய்துள்ளார்கள்.

கம்யூனிஸ்ட் கட்சியின் துணை ஸ்தாபனமான வடபிரதேச கம்யூனிஸ்ட் வாலிப சங்கத்தை ஸ்தாபித்ததில் தோழர் கார்த்தி முன்னணியில் நின்று செயலாற்றினார். இவ்வாலிபர் சங்கம் வடபிரதேசத்தில் கட்சியின் செயற்பாடுகளுக்கும், தீண்டாமை ஒழிப்புப் போராட்டத்திற்கும், தொழிற்சங்கப் போராட்டங்களுக்கும் உறுதுணையாக நின்று பெரும்பங்காற்றியுள்ளது. இவ்வாலிப சங்கத்தின் கிளைகள் யாழ் நகரின் பல பகுதிகளில், குறிப்பாக கொட்டடி, நாவாந்துறை, யாழ் பலாலி வீதி, கொழும்புத்துறை, அரியாலை, ஆரியகுளம், முஸ்லிம் வட்டாரம், வண்ணார்பண்ணை ஆகிய இடங்களில் ஸ்தாபிக்கப்பட்டன. அதேவேளை யாழ் நகரத்திற்கு வெளியே நெல்லியடி, பருத்தித்துறை, கரவெட்டி, உடுப்பிட்டி, துன்னாலை, காங்கேசன்துறை, கலட்டி, தெல்லிப்பளை, சுன்னாகம், இணுவில், சங்கானை, சுழிபுரம், மட்டுவில், கொடிகாமம், அச்சுவேலி, ஆவரங்கால் ஆகிய இடங்களில் வாலிப சங்கக் கிளைகள் நிறுவப்பட்டன. இக்கிளைகளில் கட்சியின் அரசியல் வகுப்புக்கள் அதாவது மார்க்ஸிசம் - லெனினிஸசம் - மாஓசேதுங் சிந்தனை பற்றிய அரசியல் வகுப்புக்களும், அரசியல் முகாம்களும் நடத்தப்பட்டன. இதன் விளைவாக இவ்வாலிபர் சங்க கிளைகளின் உறுப்பினர்கள், கம்யூனிஸ்ட் கட்சி நடத்திய சகல வெகுஜனப் போராட்டங்களிலும் உணர்வுபூர்வமாகக் கலந்து உரம் பெற்றனர்.

கம்யூனிஸ்ட் கட்சியின் வாலிபர் சங்கத்தின் வடபிரதேச மகாநாடுகளையும் அரசியல் முகாம்களையும் நடத்துவதற்கு உருப்படியான ஆலோசனைகளையும் திட்டங்களையும் வகுப்பதற்கு தோழர் கார்த்தி அளப்பரிய பங்கினை வழங்கியுள்ளார். இன்றும் இப்பிரதேசங்களிலுள்ள ஒடுக்கப்பட்ட மக்கள் தோழர் கார்த்தியை மறக்காமல் நினைவுகூறுகின்றனர். வடபிரதேச கம்யூனிஸ்ட் வாலிபர் சங்கத்திற்கு நானும் தோழர் கே.ஏ. சுப்பிரமணியமும் தலைமை தாங்கி ஆர்ப்பாட்ட ஊர்வலங்களையும் பல போராட்டங்களையும் நடத்தியுள்ளோம்.

வடபிரதேசத்தில் குறிப்பாக அறுபது எழுபதுகளில் வன்னிப் பிரதேசத்தில் முல்லைத்தீவு, கிளிநொச்சி, மல்லாவி, வவுனிக்குளம், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில் விவசாய சங்கங்களை அமைத்து, அப்பகுதிகளிலுள்ள விவசாயிகளின் உரிமைகளுக்காக பல போராட்டங்களை நடத்தி பல வெற்றிகளை ஈட்டியுள்ளோம். இப்பிரதேசங்களிலுள்ள உயர் பதவி வகித்த விவசாய நீர்ப்பாசன உயர் அரசாங்க அதிகாரிகளதும் பெருநில உடமையாளர்களதும் அதிகார துஸ்பிரயோகங்களுக்கும் பாரபட்சங்களுக்கும் எதிராகப் போராடி வெற்றி பெற்றுள்ளோம். இப்போராட்டங்களில் தோழர் வீ.ஏ. கந்தசாமி தனது தீவிர போராட்ட உணர்வால், தமது வாதத்திறமையை நன்கு பயன்படுத்தி விவசாயிகளின் உரிமைகளை வென்றெடுக்க எம்முடன் இணைந்து பெரும் பங்காற்றியுள்ளார்.

எமது நாட்டில் இனவாத அடிப்படையில் ஆசிரிய சமூகத்தைப் பிளவுபடுத்தி சிங்கள, தமிழ் பகுதிகளில் சிங்கள ஆசிரியர் சங்கங்களையும், தமிழ் ஆசிரியர் சங்கத்தையும் நிறுவி செயல்பட்டு வந்துள்ளனர். இந்த இனவாத அணுகுமுறைக்கு மாற்றீடாக 'ஜாதிக்க குரு சங்கமய' (தேசிய ஆசிரியர் சங்கம்) என்ற முற்போக்கு சிந்தனையை அடிப்படையாகக் கொண்ட ஒரு சங்கம் ஸ்தாபிக்கப்பட்டு செயலாற்றி வருகின்றது. இதன் கிளையை வடபிரதேசத்தில் நிறுவி ஆசிரிய சமூகத்தை ஒன்றிணைக்கும் நோக்குடன் தோழர் கார்த்தி செயல்பட்டு வந்துள்ளார்.

தோழர் கார்த்தியுடன் அ. வைத்திலிங்கம், ஐ.ஆர். அரியரத்தினம், எம்.பி. செல்வரத்தினம், அ. சிவலிங்கம், எம். குமாரசாமி, எஸ்.பி. நடராஜா ஆகியோர் இணைந்து இலங்கை தேசிய ஆசிரியர் சங்கத்தை ஸ்திரப்படுத்துவதற்கு தீவிரமாக உழைத்தனர்.

இந்த நாட்டில் பிற்போக்கு முதலாளித்துவ சக்திகளை முறியடித்து ஒழித்துக் கட்ட வேண்டும் என்றால் முற்போக்கு சக்திகள் அனைத்தும் ஒன்றிணைய வேண்டும். அதாவது இடதுசாரிகள் ஐக்கியப்பட வேண்டும் என்ற கோட்பாட்டை முன் வைத்துத் தோழர் கார்த்தி போராடி வந்துள்ளார். பெருமுதலாளித்துவக் கட்சியான யூ.என்.பியை முறியடித்து ஒழித்துக் கட்டவேண்டும் என்றால் சகல முற்போக்குச் சக்திகளும் அதாவது இடதுசாரிக் கட்சிகளான கம்யூனிஸ்ட், சமசமாஜக் கட்சிகளும் ஏனைய சிறிய இடதுசாரிக் கட்சிகளும் தேர்தல் காலங்களில் மட்டுமல்லாமல், நிரந்தரமாக ஒரு பொது வேலைத்திட்டத்தின் கீழ் ஐக்கியப்பட்டு செயலாற்ற வேண்டுமென்று தோழர் கார்த்தி வலியுறுத்தி வந்துள்ளார். அதே வேளை இந்த ஐக்கியம், இடதுசாரிக் கட்சிகளின் தலைமை மட்டங்களில் மாத்திரமல்லாமல், அடிமட்ட உறுப்பினர்கள் மத்தியிலிருந்தே கட்டி எழுப்பப்பட வேண்டும் என்று கார்த்தி வலியுறுத்தி வந்தது மாத்திரமல்லாமல் அதற்காகப் போராடி வந்தள்ளார். அதாவது இலங்கையில் ஒரு இடதுசாரிகளின் ஐக்கிய முன்னணியின் மூலம்தான் முதலாளித்துவ யூ.என்.பி. தலைமையிலான பிற்போக்குச் சக்திகளை முறியடித்து ஒரு முற்போக்கான அரசை நிறுவமுடியும் என்று கூறிவந்துள்ளதுடன் இதற்காக இதயசுத்தியுடனும் போராடி வந்துள்ளார் தோழர் கார்த்தி.

கம்யூனிஸ்ட்டுகள் வரட்டுச் சித்தாந்தவாதிகள், அவர்கள் கலாரசனையற்றவர்கள், அவர்கள் மத்தியில் சிறந்த எழுத்தாளர்களோ, கலைஞர்களோ இல்லை என்ற கருத்தை மக்கள் மத்தியில் பரப்புவதில் பிற்போக்கு முதலாளித்துவ சக்திகள் ஈடுபட்டு வந்துள்ளன. இது ஒரு தவறான பொய்ப்பிரசாரமாகும். பிற்போக்குச் சக்திகளின் இப்பொய்ப்பிரசாரத்தைத் தகர்க்கும் வகையில், அறுபதாம் எழுபதாம் ஆண்டுகளில் கம்யூனிஸ்ட் அணியைச் சார்ந்த முற்போக்கு எழுத்தாளர்களும் கலைஞர்களும் ஸ்தாபன ரீதியாக ஒன்று திரண்டு, கம்யூனிஸ்ட் கட்சியும் அதன் வெகுஜன அமைப்புகளும் நடத்திய வெகுஜனப் போராட்டங்களில் உணர்வுபூர்வமாகப் பங்குகொண்டு அந்த மக்களின் போராட்ட அனுபவங்களை கலைத்துவத்துடன் மறுபிரசவிப்புக்குள்ளாக்கி தரமான சிருஷ்டிகளைப் படைத்துள்ளார்கள். இதுதான் மக்கள் இலக்கியம் அல்லது முற்போக்கு இலக்கியம் என்று கூறப்படுகின்றது. இதற்குப் பின்னணியில் நின்று செயற்பட்டவர்களுள் தோழர் கார்த்தி முதன்மையானவர். இந்த எழுத்தாளர்களுக்கு வழிகாட்டி வளர்த்தெடுத்தவர் கார்த்தி. அவரே ஒரு சிறந்த மார்க்சிஸ இலக்கிய விமர்சகராகவும் ஆங்கில கவிதைகள் புனைபவராகவும் இருந்துள்ளார். வடபிரதேசத்தில் கம்யூனிஸ்ட் கட்சியின் உறுப்பினர்களாகவிருந்த சிறந்த மக்கள் இலக்கியப் படைப்பாளிகளான தோழர்களான கே. டானியல், டொமினிக் ஜீவா, எஸ். பொன்னுத்துரை, என்.கே. ரகுநாதன், கவிஞர் பசுபதி, இளங்கீரன், எஸ். அகஸ்தியர் ஆகியோருடன் நானும் இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் பிரதான உறுப்பினர்களாகச் செயல்பட்டோம். நாம் அறுபது எழுபதுகளில் வடபிரதேசத்தில் நடந்த தீண்டாமை ஒழிப்புப் போராட்டத்திலும், தொழிலாளர்களது போராட்டங்களிலும் நேரடியாகப் பங்குபற்றியதுடன் இந்தப் போராட்ட உணர்வின் உந்துதலினால் தரமான மக்கள் இலக்கிய சிருஷ்டிகளைப் படைத்தோம். இந்த எழுத்தாளர்களை சித்தாந்த ரீதியில் நெறிப்படுத்தி, தரமான முற்போக்கு இலக்கியப் படைப்புகளை உருவாக்குவதற்கு வழிவகுத்தவர் தோழர் கார்த்தி.

"தோழர் பெத்யூன் அவர்களின் உணர்வு, தம்மைப் பற்றிய சிந்தனை ஒன்றுமின்றி பிறருக்கான அவருடைய பூரண தியாகம், தமது வேலையில் அவர் கொண்டிருந்த எல்லையற்ற பொறுப்புணர்ச்சியிலும் தோழர்கள் மீதும், மக்கள் மீதும் அவர் வைத்திருந்த எல்லையற்ற இதய ஆர்வத்திலும் காணப்பட்டது. ஒவ்வொரு கம்யூனிஸ்டும் அவரிடமிருந்து அதைக் கற்றுக்கொள்ள வேண்டும். அவருடைய எள் எத்தனையும் சுயநலமற்ற உணர்வை நாம் எல்லோரும் அவரிடமிருந்து கற்றுக் கொள்ள வேண்டும். இந்த உயர்வைக் கொண்டு ஒவ்வொருவரும் மக்களுக்கு மிகப் பயனுள்ளவராக வாழ முடியும். ஒருவருடைய திறமை பெரிதாக அல்லது சிறிதாக இருக்கலாம். ஆனால் இந்த உணர்வு அவருக்கு இருந்தால், அவர் உன்னத சிந்தையும் தூய்மையும் உடையவராக, ஆத்மீக பலமுடையவராக, கொச்சை நப்பாசைகளைக் கடந்த ஒரு மனிதராக மக்களுக்குப் பயனுள்ள ஒரு மனிதராக இருப்பார்."

'தோழர் பெத்யூனின் நினைவுக்காக' என்ற ஒரு கட்டுரையில், மகத்தான தலைவர் மாஓ சேதுங் அவர்கள் கனடிய டாக்டர். நோர்மன் பெத்யூனின் மக்களுக்கான அர்ப்பணிப்புப் பற்றி மேற்கண்டவாறு கூறியுள்ளார். அதேபோல், எங்கள் தோழன் கார்த்தியும் மக்களுக்கும் கட்சிக்கும் சேவை செய்வதில் தம்மை உணர்வுபூர்வமாக அர்ப்பணித்தவர். ஆகவே அவரது எண்ணத்தையும் சுயநலமற்ற உணர்வையம் நாமெல்லோரும் தோழர் கார்த்தியிடமிருந்து கற்றுக்கொள்ள வேண்டும்.

■ ■ ■